பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி !
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
( பட்டுச் சேலைகளின் காட்சியகம் )
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞுூ சித்திரை மீ 06 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 12 (19-04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-113

## ஒரு வார கால யுத்த நிறுத்தம் முடிந்தது:

# இராணுவ நடவடிக்கை உடன் சாத்தியம் இல்லை

### சரணடைய மேலும் அவகாசம் வழங்க அரசு மட்டத்தில் யோசனை

கொழும்பு, ஏப்ரல் 19

இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக நடைமுறைப்படுத்திய ஒருவாரகால யுத்த நிறுத்தம் இன்று புதன்கிழமை காலை ஆறு மணியுடன் முடிவடைந்தது.

எனினும் பாதுகாப்புப்படை உயர்அதிகாரிகள் சிபார்சு செய்தது போல, ஜே. வி. பியினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக முடுக்கிவிடும் எண்ணம் அரசாங்க உயர்மட்டத்துக்கு இல்லை என்று அரசுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

ஜே.வி.பியினர் யுத்த நிறுத்தத்தை நிராகரித்துக் கடந்த ஒருவார காலமாக வன்செயல்கள் பலவற்றில் ஈடுபட்டனர். பொலீஸ் நிலையங்கள் மீது தாக்குதல்களும், படை வாகனங்கள் மீது பெரும் நிலக்கண்ணி வெடித் தாக்குதல்களும் நடத்தி இருந்தனர்.

இந்தத் தீவிர வன்செயல்களை அடக்க ஜே. வி. பியினருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும் என்று அரசுக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

எனினும் ஜே. வி. பீக்கு எதிராக உடனடியாகத் தீவிர தாக்குதல்களைத் தொடுப்பதில்லை என அரசாங்க உயர் மட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டதாக அறிய வந்தது.

நிலைமையை மெதுவாக அவதானித்து, சரணடைவதற்கான சலுகையை நீடித்துப் பொறுத்திருந்து பார்த்தால் என்ன என்று ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

எனினும் இரண்டொரு நாள் இடைவெளியின் பின்னர் நிலைமை மறு பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜே. வி. பியினருடன் சமரசப் பேச்சுக்கு இயன்றவரையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அலையே அரசாங்க வட்டாரங்களில் மேலோங்கி அடிப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டார்கள். (அ)

### முச்சந்தி முரளி



வரவு-செலவுத் திட்டத்திலே இல்லாமல், நட்டத்தை ஈடு செய்யவெண்டு உப்பிடி வேறு பொருள்களுக்கும் விலையள் உயருமோ......?

## பெற்றோல், டீசல் விலை உயர்ந்தது

### மண்எண்ணெய் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஏப்ரல் 19

மண்எண்ணெய் தவிர்ந்த ஏனைய எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பெற்றோல், டீசல் மற்றும் "பேர்ணஸ் ஒயில்" ஆகியவற்றின் விலைகளே அதிகரிக்கப்பட்டுள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்துவரும் நட்டத்தை ஈடுகட்டவே இவ்விலை அதிகருப்பு அமுல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

வறிய மக்களுக்கு உதவுவதற்காக மண்எண்ணெய்யின் விலை அதிகரிக்கப்படவில்லை.

இன்று முதல் பெற்றோலின் விலை ஒரு லீற்றர் 2 ரூபா 50 சதத்தினாலும் டீசலின் விலை ஒரு லீற்றருக்கு 42 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பேர்ணஸ் ஒயிலின் விலை ஒரு லீற்றருக்கு 33 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்விலை அதிகரிப்பினால் கிடைக்கும் வருமானத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு இதுகாலவரை ஏற்பட்ட 180 கோடி ரூபா நட்டத்தின் ஒரு பகுதியை ஈடுகட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### மக்கள் வங்கியின்

## கிளிநொச்சி, பரந்தன் கிளைகளில் இன்று முதல் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

மக்கள் வங்கியின் கிளிநொச்சி, பரந்தன் கிளைகளில் இன்று முதல் பணக் கொடுக்கல், வாங்கல் வேலைகள் ஆரம்பமாகின்றன.

குறிப்பிட்ட இரு வங்கிக் கிளைகளினதும் விசேட கரும பீடம் ஒன்று கிளிநொச்சி தபாற்கந்தோரில் திறக்கப்பட்டு, அங்கேயே பணக் கொடுக்கல், வாங்கல் வேலைகள் நடைபெறவுள்ளன.

இக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தோர், நகைகளை மீளப் பெற விரும்பின், உரிய கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு இக்கரும பீடத்தின் மூலம் பணத்தைச் செலுத்தலாம்.

ஏற்கனவே பணம் செலுத்தியவர்களது அடகு நகைகள், இம்மாதம் முடிவடைவதற்குள் இக் கரும பீடம் மூலம் வழங்கப்படவுள்ளன. (ஒ)

### திருமலை குண்டுவெடிப்பு:

## இறந்தோர் எண்ணிக்கை-46 39பேர் அடையாளம் கண்டுபிடிப்பு

திருகோணமலை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 39 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட சடலங்களில் 27 சிங்களவர்களினவை, 9 தமிழர்களினவை, 3 முஸ்லிம்களினவை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை நகரில் மாலை 5 மணி முதல் காலை 7 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது.

அரசு அலுவலகங்கள் முற்றாக இயங்க ஆரம்பிக்கவில்லை. திருமலை செயலகத்துக்குப் பாதுகாப்பின்மை கருதி ஊழியர் செல்லத் தயங்குகிறார்கள்.

மணிக்கூண்டு கோபுர வீதியில் உள்ள பெரும்பான்மை இனத்தவரின் கடைகள் மூடப்பட்டே இருந்தன.

குறுகிய தூர பஸ்சேவைகளே நடைபெறுகின்றன. நீண்ட தூர பஸ் சேவைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. (ஒ-எ)

## ஆயுள்வேத வைத்தியர் மேசன் தொழிலாளி கொலை

நேற்று ஆயுள்வேத வைத்தியர் ஒருவரும் மேசன் தொழிலாளி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ் பிறவுண் வீதி அரசடி வீதிச் சந்தியில் ஆயுள்வேத வைத்தியரான புஷ்பலிங்கம் என அழைக்கப்படும் நடராசா விஜயேந்திரன் (வயது 45) சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமை புரிந்து வந்தார்.

இதேவேளை நேற்றுக்காலை திருநெல்வேலியில் வைத்து மேசன் தொழிலாளியான செல்வரத்தினம் குணசீலன் (வயது 25) சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் மூளாயைச் சேர்ந்தவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு சம்பவங்களுக்கும் தாமே பொறுப்பு என்று தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர். (ஒ-9)

## ஈ.என்.டி.எல்.எவ்வும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ்.கந்தர்மடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து ஈ. என். டி. எல். எவ். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. பாபுஜி கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இன்று யாழ். குடாநாட்டில் நடக்கும் கொலைகளை உடன் நிறுத்த மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறோம். கந்தர்மடத்தில் 14-04-1989 அன்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஈ. என். டி. எல். எவ். வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் அச்சம்பவத்தில் உயிர் இழந்த அப்பாவிப் பொது மக்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென் பகுதியில் நேற்றும் நால்வர் கொலை

கொழும்பு, ஏப்ரல் 19

கண்டியில் அரச அதிகாரி ஒருவரும் அவரது மகனும் இனந்தெரியாதவர்களினால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரத்தில் ரிஸர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அவரது சகோதரரும் இனந்தெரியாதோரால்சுட்டுக் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

## கன்னட எழுத்தாளருக்கும் கொலைப் பயமுறுத்தல்!

பொங்களூர், ஏப்ரல் 19

இந்து தீவிரவாதிகள் கர்நாடக மாநிலத்தில் திரு.எம். என். கல்பர்கி என்ற கன்னட எழுத்தாளருக்கு கொலைப்பயமுறுத்தலை விடுத்துள்ளனர்.

கன்னட மொழியில் அவர் எழுதிய 'மார்க்க ஒன்டு' [ஒரேவழி] என்ற புத்தகம் இந்து மதத்தின் ஒரு பிரிவினரான 'லிங்காயத் சமூகத்தை நிந்திப்பதாகக் கூறி இப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் தர்வார் நகரில் வசிக்கும் இந்த எழுத்தாளருக்கு இப்போது இருபத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படை வெளியேறுவது குறித்து பத்மநாபா கூறும் கருத்து

சென்னை, ஏப்ரல் 19

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பதற்கு ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படும் வரை இந்திய அமைதிப் படை வெளியேறக் கூடாது.

ஈழ மக்கள் புரட்சிசர விடுதலை முன்னணியின் தலைமைச் செயலாளர் திரு. கே. பத்மநாபா யு. என். ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கையில் இருந்து அமைதிப்படையை அகற்றுவதிலேயே குறியாக உள்ளன.

அந்தக் குறிக்கோள் எட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 32 பயணிகள் பலி

புதுடில்லி, ஏப்ரல் 19

புதுடில்லி - கர்நாடககடுகதி ரயில் நேற்றுப் பிற்பகல் விபத்துக்குள்ளாகியதில் 32 பயணிகள் உயிரிழந்தனர். [ஒ-எ]

### அரசு - விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சு:

## ஆரம்பக் கலந்துரையாடலுக்கு அன்ரன் பாலசிங்கம் வருவார்

கொழும்பு, ஏப்ரல் 19

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியான வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாட திரு. அன்ரன் பாலசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அடுத்த வாரத்தில் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்த திரு. அன்ரன் பாலசிங்கம் கொழும்பு வருவார் என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

திரு. அன்ரன் பாலசிங்கம் தற்சமயம் லண்டனில் தங்கி இருக்கின்றார். [உ-எ]

## குண்டுத் தாக்கு; ஒருவர் மரணம்

கொழும்பு, ஏப். 19

கடந்த ஞாற்றுக்கிழமை இரவுவெள்ளவத்தையில் தனியார் பஸ் அலுவலகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார் என்று தெரிகிறது. [ஒ-எ]

## முன்னாள் சிப்பாய்கள் 86 பேர் சரண்

கொழும்பு, ஏப்ரல் 19

ஒரு வார கால யுத்த நிறுத்தத்தின்போது தென் பகுதியில் சரணடைந்தவர்களில் 86 பேர் இலங்கை இராணுவத்தில் பணி புரிந்த சமயம் சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகியவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## இன்று தேர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

நல்லூர் ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது காலை 7.30 மணிக்கு வசந்தமண்டப பூஜையாகி 9.00 மணிக்கு விநாயகர் பெருமான் ரதத்தில் ஆரோகணித்து திருவீதியுலா வருவார்.

நாளை வியாழக்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தில் காலை 10மணிக்கு தீர்த்தோற்சவம் நிகழும்-

★ ★ ★

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறுகிறது. காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபபூஜையாகி 8.00 மணிக்கு கோபுர வாசலில் எழுந்தருளும் அம்பிகை, விநாயகர், சுப்பிரமண்யர் சகிதம் 9 மணிக்கு திருத்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வரும்காட்சி இடம் பெறும்.

★ ★ ★

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை நடைபெறுகிறது. அம்பிகை புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவார்.

★ ★ ★

கிளிநொச்சியில் இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை நடைபெறுகின்றது. அம்பிகை புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவார்.

[தேர்த்திருவிழாக்கள் பற்றிய சிறப்பிதழ்கள் உட்பக்கங்களில்.]

## தொலைபேசி பரிவர்த்தனை நிலையம்; பண்ணை பொருத்தமற்ற இடமாம்

யாழ்ப்பாணம், ஏப் 19

யாழ் நகரில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை அமைப்பதற்கு பண்ணையிலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் அமைந்திருந்த இடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் பொருந்தமற்றது எனக் கூறி நிராகரிக்கப்பட்டது.

இந்த இடத்தில் புதிய தொலைத் தொடர்பு கட்டிடம் ஒன்றை அமைக்கும் யோசனையையும் அதிகாரிகள் நிராகரித்து விட்டனராம்.?

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் மகாநாட்டிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அறியவருகிறது.

தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை அமைப்பதாயின் அது நகரின் மையப் பகுதியில் அமைக்கப்படவேண்டும். அந்த நிலையத்தின் நாலாபுறங்களிலும் தொலைத் தொடர்பினை பரிவர்த்தனை செய்யக்கூடியதாக அது இருக்கவேண்டும்.

ஆனால் பண்ணையிலுள்ள பழைய பரிவர்த்தனை நிலையமோ இரு பக்கங்கள் கடலால் சூழப்பட்டுள்ளது. மிகுதி இரு பக்கங்களினால் மட்டுமே தொலைத்தொடர்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19 - 04 - 1989
புதன்கிழமை

சுபநேரம்:
04.32 முதல் 06.02 வரை

ராகுகாலம்:
12.02 முதல் 01.32 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

EN A 30 Austin கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். T. தியாகராஜா No. 16, விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (10614)

### அச்சகம் விற்பனைக்கு

உன்னதமான நிலையிலுள்ள ஓட்லி சிலிண்டர் அச்சியந்திரம், புத்தம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் புதியவை. உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்: முகாமையாளர், மலரகம், ஏழாலை வடக்கு, ஏழாலை. [183]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, சேவல் குஞ்சு, கறுப்பு சேவல் குஞ்சு (18-4-89) செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். [தடுப்பூசி போடப்பட்டது.) முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னுகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (134)

(Cobb) இன புறொயிலர் குஞ்சு (25-04-1989) செவ்வாய்க்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னுகம். [புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10580)

Nallur Farm Gentre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy - line கறுப்புவெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும்கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2088)

### வகுப்புக்கள்

கேக் ஐசிங், ஜென்றல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கும், இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆரம்பம்: 22.04.1989 தொடர்பு: N Arullananda, 11/2, Wyman Road, Nallur. [/2260]

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ கசெற், Phillips கசெற் றெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருட்களையும் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### தவறிவிட்டது

Campus றெக்கோட் புக், சங்குவேலிக்கும் குளப்பிட்டிக்கும்இடையில் 17-4-89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் மருதடி கோவிலுக்கு அருகிலுள்ள S. மனோகரன் என்பவரது கடையில் ஒப்படைக்கவும். அல்லது இ. வேலுப்பிள்ளை வளலாய், அச்சுவேலிக்கு அனுப்பி வைக்கவும். (10608)

### தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, போட்டோஸ்ரற், ரோணியோ வேலைகளில் அனுபவம் மிக்க பெண் ஊழியர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்: சாயி என்ரபிறைஸ், 303 எ, பலாலி வீதி, திருநெல்வேலி. [10604]

## ஆயுதத்துடன் நால்வர் தப்பி ஓட்டம்

பண்டாரவளை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு சந்தேக நபர்கள் கடந்த சனிக்கிழமை தப்பி ஓடினர்.

பொலீஸாரின் 303 ரக ரைபிளை எடுத்துக் கொண்டு இவர்கள் ஓட்டம்பிடித்தனர்.

பொலீஸார் எடுத்த பதில் நடவடிக்கையில் இவர்களில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்-

இச்சம்பவம் தொடர்பாக நான்கு பொலீஸார் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். [ஒ-எ)

## காயங்களுடன் 4 சடலங்கள்

கொழும்பு, ஏப். 19

மாத்தறை, மொரவாக்க பொலீஸ் பகுதியில் களுபோவிட்ட என்னுமிடத்தில் 4 சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டன.

கொலையுண்ட நால்வரும் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்

இறந்தவர்கள்] ஐ. தே. க. ஆதரவாளர்கள் என்று சொல்லப்பட்டது. (ஒ- எ)

## S. L. A. S Exam - May 1989

**English Medium Classes**
**(Intensive Revision)**

(1) Economics Current Affairs & General. Knowledge (Including Constitutional Devt)
(2) Comprehension

Date of Commencement 21-4-89 till beginning of exam
3 Days per week
Fees 150/-

**School of Business Administration**
16, 3rd Cross Street,
JAFFNA.

[C-2217]

---

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
தேர்த் திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அபிராமி அந்தாதி தினமும் ஓதுங்கள்
25 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி ''அபிராமி அந்தாதி'' புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

---

## MEMORIAL SERVICE

Rosalind Jeyamalar Kanapathipillai
at
St. John's Church, Chundikuli
on
**Thursday 20 - 04 - 1989**
**at**
**3- 30 p. m**

**Friends and Relations please accept this intimation.**

**No.7, Somasundaram Avenue, JAFFNA.**

(10615)

---

## அந்தியேட்டி அறிவித்தலும் நன்றி நவிலலும்



**திரு. சுப்பையா சுப்பிரமணியம்**

பிறப்பு: 31-01-1922 இறப்பு: 21-03-1989

அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் சு. சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். மேலும் ஈமக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 20-4-89 வியாழக்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள்,

கனையந் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(10606)

---

# TENDER

தெல்லிப்பளை சந்தியில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷனுடைய நான்கு புதிய கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். இதற்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் வட்டுக்கோட்டையிலுள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் காரியாலயத்தில் பெற்று, 29-4-89க்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

பொருளாளன்
AMERICAN CEYLON MISSION
அமெரிக்கன் இலங்கை மிஷன்.

வட்டுக்கோட்டை,
19-4-89.

(10617)

---

## சுஹேரா ரவல்ஸ் வெற்றிடங்கள்

**சவூதி அரேபியா (Saudi Arabia)**

| | |
|---|---|
| House Maids | (பெண்கள்) |
| Labourers | (ஆண்கள்) |
| Cleaners | (ஆண்கள்) |

**தைவான் (Taiwan)**

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மூன்று கிழமைகளில் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

**சுஹேரா ரவல்ஸ்**
21, வேம்படி றேட், யாழ்ப்பாணம்.

(C/2288)

---

## மற்றொரு நோயாளியையும் காணவில்லை

தெல்லிப்பளை மனநோய் ஆஸ்பத்திரியிலிருந்து இன்னொரு நோயாளி காணமற் போயிருக்கின்றார்.

சிலாவத்துறையைச் சேர்ந்த நசீர்கான் என்ற இந்த நோயாளி 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காணமற் போனார் என அறிய வந்துள்ளது.

இதே ஆஸ்பத்திரியிலிருந்து கடந்த மாதம் 17 ஆம் திகதி காணமற் போன துரைரத்தினம் ஜெயக்குமாரன் என்பவர் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

---

## கண்ணீர் அஞ்சலி

**அரியரெட்ணம் சிறீதரன்**
(தாடி சிறீ)

14 - 04 - 89 அன்று கந்தர்மட சம்பவத்தில் மரணமடைந்த சிறீதரனுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

பெற்றோர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

சண்டிலிப்பாய்
வடக்கு

(C/2299)

---

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னுகம்
## கேள்வி அறிவித்தல்- 1989

எமது 02- 04- 89 ஆம் திகதிய அறிவித்தலைத் தொடர்ந்து கீழ்க்காணும் இறைச்சிக் கடை, கருவாட்டுக்கடை ஆகியவற்றுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28- 04- 89 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். குத்தகைக்கான காலம் 01- 05- 89 தொடக்கம் 31- 12- 89 வரையிலானதாகும். விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் விசேட ஆணையாளரினுல் கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 26- 04- 89 ஆந் திகதி நண்பகல் 12 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். ஏனைய விவரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு, பிரதேச சபை.

சுன்னுகம்.
17- 04- 89

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக்கடை (சுன்னுகம் மீன்சந்தை) | 100/- | 500/- | 35, 000/- |
| 2. கருவாட்டுக்கடை இல. 3 | 25/- | 100/- | 1, 000/ |
| 3. ,, இல. 5 | 25/- | 100/- | 1, 000/- |
| 4. ,, இல. 7 | 25/- | 100/- | 1, 000/- |

(C/2298)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுந்தரம்பிள்ளை துரைராசா**
பொலீஸ் சார்ஜண்ட் 8044
(பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அழுத்கம)

அன்னையின்மடியில்: 15-01-1937 ஆண்டவனடியில்: 23-04-1986

திதி: 19-04-1989

அப்பா நீங்கள்!
எம்மைவிட்டுச் சென்று
மூவாண்டுதான் ஆனாலும்
நெஞ்சைவிட்டு அகலாது
தூய ஒளிச்சுடராய்
எங்களுக்கு ஒளிதந்து
எம் இன்ப துன்பங்களில்
எம்மை வழி நடத்தி
என்றுமே எம்முடனிருக்கும்
எமதன்புத் தந்தையின் ஆன்மா
ஈடேற வேண்டுகின்றோம்.


பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்.

ஜெயந்தி நகர்,

(10607)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**விஞசித்தம்பி பொன்னையா**

தோற்றம்: 19- 03- 1911 மறைவு: 19- 03- 1989

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி: ஞானம்மா
மகள்: இந்திராதேவி, வனிதாதேவி
மருமக்கள்: தயானந்தசோதி, கபிலேஸ்வரன்
பேரன், பேத்தி: கிருபாகரன், கிருவாகினி, சந்திரலதா, நிர்மலா.

[C/2297)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வண்ணை-ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ரதோற்சவ மலர் ★

பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்!

★ பேபிசூட், ★ றெடிமேட், ஆடைவகைகள்
★ சேட்டிங் - சூட்டிங் ★ பற்றிக் சவுண்
★ பான்ஸி குட்ஸ் வகைகளுக்கும்,

சிறந்த இடம்

**வெல்கம் சேல்ஸ் சென்ரர்**

978, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்!

★ தரமான மளிகைப் பொருட்களை
★ மலிவாக வாங்க

**லக்கி ரேட் சென்ரர்**

507, (939) கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் தங்கரதமேறி
இன்று தந்திடுவாள் திருக்கோலம்
நீவிர் கண்டிடுவீர் அருட்கோலம்!

ஆங்கில மருந்து வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

**கவிதா பார்மஸி**

இல 959, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்!

★ தரமான சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கு
நாடுங்கள்

**நியூராஜா கிறீம் ஹவுஸ்
அன் கபே**

64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வலமுற நாதனை வைத்து மணந்தொரு
மாவடி நீழல மர்ந்தவளே!

லேடிஸ் அன் ஜென்ஸ்
சிகை அலங்காரம் செய்ய

**'ஷகி சலூன்'**

(ஏ. ஜி. டாஸ்)
596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை
தேரேறி வரும் இந்நாளில்
அன்னை அருள்பெற
வாழ்த்துகின்றோம்
சிறந்த புகைப்படங்கள் மூலம்
50 வருடகால இணையற்ற சேவை செய்து
பொன்விழாவில் காலடி எடுத்து வைக்கும்
சிறந்த ஸ்தாபனம்

**பாரத் ஸ்ருடியோ**

82/1. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மருது, நாவல் மரங்களிடையே ஆலயம் கொண்ட நாச்சியம்மை

இளஞ் சைவப் புலவர்
**இராசையா - ஸ்ரீதரன்**

இலங்கைத் தீவின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாண நகரில் வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயம் என வழங்கும் (நாச்சிமார் கோவில்) இவ்வாலயத்தைப் பற்றிய விரிவான சரித்திர சாதனங்கள் இல்லாதிருந்தபோதிலும் பண்டைய பாடல்கள் சிலவற்றிலிருந்தும் 1898ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்களால் சைவசமய கிறிஸ்தவ கோவில்களின் பதிவு இடாப்பு தயாரிக்கப்பட்டபொழுது இருந்த சில விபரங்களைக்கொண்டும் கிராம மக்களிடையே வழங்கிவரும் ஐதீக வரலாறுகள் பற்றியும் ஆதாரமாகக் கொண்டு நாம் அறியக்கூடியவற்றில் சில இங்குகுறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இன்று வானளாவ உயர்ந்து நிற்கும் இராஜகோபுரத்துடன் சிற்பங்களோடு கூடிய அழகிய அலங்காரக் கோயிலில் அன்னை காமாக்ஷி அம்பிகை வீற்றிருந்து அன்பர்களுக்கு அருட்கருணை மழை பொழிவதை நாம் கண்முன்னேகாண்கின்றோம். சரித்திரப் புகழ் பெற்ற வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயம் பழைமையும் தொன்மையும் வாய்ந்த கீர்த்திமிக்க திருத்தலமாக இன்று விளங்குகின்றது.

முற்காலத்தில் இப்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கண்மையில் குளங்கரையைச்சுற்றி நாவல், மருது போன்றவை அடர்ந்து நின்றன. ஒருநாள் நண்பகல் உச்சி வெயிலில் அவ்வயலில் குடியிருந்த இளம்பெண் ஒருவர் விறகு சேகரிப்பதற்கென அவ்விடத்திற்கு வந்தார். வந்து மாதவிடாய் காலத்தில் மருதமரத்தடியில் சிறு நீர் கழித்தார். அந்த இடத்தை அசூசைப்படுத்தியதால் சீற்றங்கொண்ட தேவதை அந்த இளமங்கையின் தனங்களைத் திருகிவிட்டதாம்.

இதனால் பயமுற்ற மக்கள் திகைத்தனர். இவ்விபரங்களை அறிந்த விஸ்வகுல வய்யாதிபமாது ஒருவர் தேவதையைச் சாந்தப்படுத்தும் நோக்கமாக கல் ஒன்றை வைத்து மருதமரத்தடியில் மங்கல விளக்கேற்றி வழிபாடு செய்துவந்தார். இவ்வாறு ஆதிமுதல் ஆரம்பமான கோயில்தான் இன்று அன்பர்களது அயராமுயற்சியால் அழகுற அமைக்கப்பட்டு அருள் ஸ்தலமாக உயர்ந்து மிளிர்கின்றது.

கி. பி 1898ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்கள் சைவசமயக் கோயில்கள் கிறிஸ்தவக் கோயில்கள்பற்றிய பதிவு இடாப்பு தயார்செய்யப்பட்டபொழுது அதில் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயம்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கி. பி. 1870இல் திரு. காசிநாதர் தம்பர் கட்டியது கல்கட்டிடம்.

மனேஜர்: விஸ்வகுலதுங்க மேஸ்திரி கந்தர்.

திருவிழா: வருடந்தோறும் ஒன்பதுநாள் திருவிழா நடாத்தி பத்தாம்நாள் பங்குனி உத்தரத்தன்று மணவிழா பதினோராம்நாள் ஊஞ்சல் உற்சவம்.



வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் திருவுருவம்

இவ்வாலயம் வண்ணை ஸ்ரீகாமாக்ஷிஅம்பாள் ஆலயம் என்றும், வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் நாச்சிமார் கோவில் என்னும் சிறப்புப் பெயருடன் அழைக்கப்பட்டுவருகின்றது. ஆரம்பத்தில் நாச்சிமார் கோயில் என்று அழைக்கப்பட்டு வந்தது. இலங்கை வடபகுதிப் புகையிரதப்பாதையில் காலஞ்சென்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் நாச்சிமார் கோயில் என்னும் புகையிரத தரிப்பு நிலையத்தை, நாச்சிமார்கோயில் வீதியும் புகையிரத தப்பாதையும் சந்திக்குமிடத்தில் ஏற்படுத்தி இலங்கைப் புகையிரதப் பாதைகளின் படத்தில் நிலைபெறச்செய்து பெருமைப்படுத்தியதை நாம் இன்றும் காணலாம். இது

[4 ஆம் பக்கம் பார்க்க]

**மலர் தயாரிப்பு:
'உதயன்' செய்தியாளர்
த. பரமலிங்கம்**

## தேவஸ்தான செய்தி!

யாழ் திருவண்ணை, குளங்கரை, மருதடியில் [நாச்சிமார் கோவில்) ஸர்வாநுக்கிரஹ ஸாலினியாய் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அண்ட கோடிகளின் அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை, நாளது இன்று சித்திரைத்திங்கள் 6 ஆம் நாள் புதன்கிழமை [19-4-89] விசேட அபிஷேக பூஜாகலாபங்களை அடுத்து காலை 9.30 மணிக்கு சித்திர ரதத்தில் எழுந்தருளி பக்த கோடிகளுக்கு இஷ்ட காமியாதி சித்திகளையும் நாட்டில் சுபீட்சமும், சாந்தியும் சமாதானமும் நிலவ சங்கல்பித்து திருவுலா வருகின்ருள்.

இவ்வண்ணம் கடாட்சிக்க அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம்

திருவருள் எங்கணும் தேங்கிடக் கங்கையில்
சிரறம் செய் யன்ன பூரணியே!

ஆடம்பர, அழகு சாதனங்களுக்கு

**ரதி பென்ஸி ஹவுஸ்**

5ɔ, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

வியனுறும் ஐங்கரன் வென்றிடு சண்முகன்
மிஞ்சி யணைத்திடும் நெஞ்சினளே!

மளிகைப் பொருட்களை மலிவு விலையில்
வாங்க நாடுங்கள்

**வ. பொன்னுச்சாமி அன் சன்ஸ்**

542, கே. கே. எஸ். றோட்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

அரிபிரமாதி அகண்டமும் அண்டமும்
ஆக்கி யணைத்தழி வாக்குவையே!

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்

**ரஞ்சனஸ்**

17, 18, 18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பரிபுரம் நூபுரம் தண்டை சிலம்பணி
பாதபங் கேருகப் பார்வதியே!

சகலவித அழகு சாதனப் பொருட்கள்
சாய்ப்புச் சாமான்களைப் பெற

**அம்பிகாபதி
பான்ஸி றேடர்ஸ்**

9A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

உங்கள் மங்களகரமான வைபவங்களை
கறுப்பு - வெள்ளை வர்ணங்களில் தரமாகப்
படம் பிடித்துக்கொள்ள

**றெக்ஸ் ஸ்ருடியோ**

606, (918) கே. கே எஸ். றோட்.
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

பகவதி அந்தரி லபங்கழை ஏந்திய
பஞ்சமி பாப விமோசனியே!

பாடசாலை உபகரணங்கள், சகலவித நூல்கள்,
புத்தகங்கள் அனைத்திற்கும்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

4A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுகவதி புங்கவி சம்பு குடும்பினி
சுந்தரி துக்க நிவாரணியே!

ஆலய அபிஷேக பொருள்கள், மருந்துச் சரக்குக ,
சங்கு - பட்டு - நூல் வகைகளைப் பெற
நாடவேண்டிய இடம்:

**க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்**

76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நகபதி நந்தினி மாவடி கம்பையில்
நம்பன் அணைத்திடும் நாரணியே!

உங்கள் சகல மின்னிணைப்பு வேலைகளுக்கும்,
பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்!

**யூனிரோன்**

764 c, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்

நலமுறும் சந்ததி நாடியுன் சந்நிதி
நம்பியு வந்தருள் நல்குவையே!

நவநாகரிக டிசைன்
நகைகளுக்கு

**ரூபி ஜுவல்லறி**

111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இகமதில் சாந்தியும் இல்லற மேன்மையும் ஈந்திட வந்தருள் ஈகையளே!

★ கேக் சாமான்கள்
★ பலசரக்குப் பொருள்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்

★ பாடசாலை உபகரணங்கள்
★ பிளாஸ்ரிக் பொருள்கள்
★ அன்பளிப்புப் பொருள்கள்

அனைத்தையும் நிதான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**கரன் றேடிங் சென்ரர்**

764, கே. கே. எஸ். வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

# இரணைமடு கனகாம்பிகை அம்பாள் இன்று புதிய சித்திரத்தேரில் பவனி

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பெரிய குளங்களில், அக்காலத்து அரசர்கள் ஒவ்வொரு குளத்தின் கட்டிலும் ஒரு கோயிலை அமைத்து காவல் தெய்வமாக வழிபட்டு வந்திருப்பதை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

இரணைமடுக்குளம் பிரிட்டிஷ் காலத்தில் அமைக்கப்பட்டது. கட்டுமான வேலைகள் 1903ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1920ஆம் ஆண்டு வரை முதல் கட்ட வேலைகள் நடைபெற்றன. இரண்டாம் கட்ட வேலைகள் 1954இல் பூர்த்தியாக்கப்பட்டன. ஆனால் அவர்கள் கோயில் அமைக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளவில்லை.

முன்னாள் யாழ் அரசாங்க அதிபரும், காணி மின்சக்தி அமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு. ம. ஸ்ரீகாந்தா, அருட்திரு யோகர் சுவாமி அவர்களின் திருவருள் பெற்றினால், இரணைமடு குளத்திற்கு அருகே கோயில் அமைப்பதின் அவசியத்தை உணர்ந்தார். அவரைத் திருவருளும் தூண்டிற்று.

அவ்வமயம் கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரியாக பணிபுரிந்த திரு தி. முருகேசம்பிள்ளை அவர்கள், கரைச்சிப் பகுதி மக்கள் பலருடனும் தொடர்பு கொள்ளும் முகமாக, திரு. வீ. க. முருகேசு, திரு. வே இராசேந்திரம் இன்னும் பலரோடு ஆலோசித்தபோது அனைவரும் அம்பாள் கோயில் அமைவதை வரவேற்றார்கள்.

**இடம் தெரிவான அற்புதம்**

1959ஆம் ஆண்டு, கனகாம்பிகைக்கு ஆலயம் அமைத்திட திருவருள் பாலித்த வேளை, திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் திரு. தி. முருகேசம்பிள்ளை, திரு. வீ. க. முருகேசு, திரு. வே. இராசேந்திரம் ஆகியோர் சகிதம் "ஜீப்" வாகனத்தில் கிளிநொச்சிநீர் நிலையைமருவிய வில்சன் வீதியில் வந்து நின்ற காலை, பிரதான வாய்க்கால் பக்கம் நோக்கி ராசயாளியாகிய கெருடன் தாழப் பறந்து, வட்டம் இட்டது. ராசயாளியாகிய கெருடன் பிரதான வாய்க்கால் மேல் பறந்து 'ஜீப்' வாகனத்தின் வேகத்திற்கு சரிசமனாக முன்னே பறந்து செல்ல, அவர்களும் அதனைப் பின்தொடர்ந்தனர்.

இரணைமடு நெடும் தடாகத்தின் இடது கரையில் சோலையாய் அமைந்திருந்த விருட்சத்தில் ராசாளியாம் கெருடனும் அமர்ந்திட ஆலயமும் அமைவாய் வகுத்தனர்.

22-4-1959 இல் சித்திரா

**அ. க. செல்வவிநாயகம்**
(செயலாளர், சித்திரத்தேர் திருப்பணிச்சபை)

பௌர்ணமித்தினத்தில் ஆரம்பப் பொங்கல் மகோற்சவம் நடைபெற்றது. அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலயம் அரும் கலையம்சத்துடன் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் தன்னகத்தே கொண்டு, மகிமையுடன் விளங்குகிறது.

**மகா கும்பாபிஷேகம்**

22 1-1961இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

ரௌத்திரி வருஷம் உத்தராயணம் பங்குனி மாதம் 7ஆம் திகதி 20-3-1981) சுக்கில வாரம் பௌர்ணமியில் உத்திர நட்சத்திரத்தில் ஸ்ரீ கனகாம்பிகை அம்பாளுக்கும், விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி ஆதிய மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

1981ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு பத்துத் தினங்களில் கட்டுத்தேர் அமைக்கப்பட்டு தேர்த் திருவிழாவும் இடம் பெற்றது.

**திருவுருவ ஊர்வலம்**

மதுரையில் இருந்து தருவிக்கப்பட்ட அழகு சொட்டும் சிற்ப நுணுக்கம் நிறைந்த ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் திருவுருவம் 1961 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை சிவன் கோவிலல் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு 19-1-1961 இல் குமரபுரம் முருகன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு வலம் வந்து அம்பாள் ஆலயத்தை வந்தடைந்தது.

அன்று தொட்டு இன்று வரை அம்பாளின் ஊர்வலம் கரைச்சிப் பகுதியில் வருடம் ஒருமுறை வலம் வருவது கரைச்சிப் பகுதி மக்களின் தவப்பயனாக அமைந்துள்ளது.

**சித்திரத் தேர்**

வன்னிப் பகுதியில் முதலாவது சித்திரத்தேர் இங்கேயே திராவிட மரபில் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்தபதி சிற்பக் கலாமணி திரு. க. செல்வராசா குழுவினர் (திருநெல்வேலி - யாழ் நகர்) குறுகிய காலத்தில் வன்னிப் பிரதேசத்தின் முதலாவது சித்திரத் தேரை அம்பாளுக்கு அழகுறச் செய்து முடித்தமை அம்பாளின் திருவருளே. ஏழு லட்சம் ரூபா மதிப்பீட்டிலான சித்திரத்

(8 ஆம் பக்கம் பார்க்க)


## இரணைமடு ஸ்ரீகனகாம்பிகை அம்பாள் ஆலயம்
### தர்மகர்த்தா சபை, பரிபாலன சபை, தேர்த்திருப்பணிச் சபை ஆகியவற்றின் இதயம் கலந்த நன்றி

★ துரிதகதியில் வன்னி மாவட்டத்தின் முதலாவது சித்திரத்தேர் இனிது நிறைவு பெற வாரி வழங்கிய வள்ளல்கள் யாவருக்கும் —
★ சகல துறைகளிலும் துரிதகதியில் செயற்பட்ட அனைவருக்கும் —
★ ஸ்தபதி சிற்பகலாமணி திரு. க. செல்வராசா குழுவினருக்கும் —
தேர்த் திருவிழா நடைபெறும் இப்புனித நன்னாளில் வாழ்த்துத் தெரிவித்து, சிரம் தாழ்த்தி வணங்கி, இன்னல் நீங்கி இன்பம் பெறுவோமாக.

பரிபாலனசபை
19-4-1989

வே. இராசேந்திரம்
தலைவர்


## வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ★ ரதோற்சவ மலர் ★

# பிரதம குருவின் ஆசி!

வண்ணை குளங்கரை மருதடியில் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் எழுந்தருளி நாடிவரும் அடியார்களுக்கு அருள் பாலித்து வருகிறாள். அருளது சக்தியாகும். சிவத்தின் கருணையே அருட் சக்தி என்று ஆகம நூல் கூறுகிறது. அந்த அருட் சக்தி பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள தாவரசங்கமப் பொருட்கள் யாவற்றிற்கும் அருட்சக்தியே தாயாக விளங்குகிறாள்

சகல உயிர்களுக்கும் தாயாக விளங்கும் தேவியின் திருப்பாதங்களில் சரண் அடைதலே மிகவும் எளிமையானது. அடியார்களுக்கு வேண்டத்தக்கது அறிந்து கேட்டதிலும் அதிகமாக அள்ளிக் கொடுப்பாள் வண்ணை மாநகரில் எழில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள். ஆலய மஹோற்சவத்தின் சிகரமென அமைந்த விழா அன்னையின் இரதோற்சவமாகும்.

இன்று (19 4-89) காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் மக்கள் கணபதி, கந்தன் உடன் வர தேருக்கு எழுந்தருளி அன்பர்கள் யாவருக்கும் இன்னருளை அள்ளி வழங்கிய வண்ணம் வரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஆகவே



அம்பிகையை பக்தியுடன் வணங்கி அவளின் கடைக்கண் நோக்கு கிடைக்கப் பெற்று சகல சௌபாக்கியங்களையும் பெற்று உய்வோமாக.

—தேவஸ்தான பிரதம குரு 'கிரியா கலாபமணி' சிவஸ்ரீ பா. பஞ்சாட்சரக் குருக்கள்.

## மருது, நாவல் மரங்......


[3 ஆம் பக்கத் தொடர்ச்சி] மட்டுமன்றி 'நாச்சிமார்கோவிலடி என்னும் பெயரினால் அழைக்கப்படும் உபதபாற்கந்தோர் முதன்முதல் மேற்படி ஆலயத்திற்குரிய கட்டிடத்திலேயே கி. பி. 1951ஆம் ஆண்டு தொடங்கியதும் தபால் இலாகாவில் உபதபாற் கந்தோர் நிரலில் பதியப்பட்டு இருப்பதும் பெருமையுடைத்து.

இவ்வாலயம் உள்ள நிலயம் 'குளக்கரை மருதடி' என உறுதிச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கி. பி. 1870ஆம் ஆண்டிலிருந்தே கோயிலுக்கு நிலங்கள் முறைமையாகத் தரும சாதனம் செய்யப்பட்டிருப்பதை நாம் சாதனங்கள் மூலம் அறியக்கூடியதாகஇருக்கின்றது. இக்கால எல்லைக்கு முன்னுள்ள விபரங்கள் எழுத்திற் காணக்கூடியதாகவில்லை. கி. பி. 1870, 1887, 1893, 1912, 1933, 1969 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவ உறுதிச் சாதனங்கள் இருக்கின்றன. எனவே இக்கோயில் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே கோயில் ஆதீன மகாசபையினரால் முறைமையாக நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இந்நக் கோயிலில் அழகிய

[7-ஆம் பக்கம் பார்க்க]


★ மிஸ்ரொக்ஸ் கொயில்கள், "பபிள்" சலவைப் பவுடர், ரிப்போல் மற்றும் ஏனைய ரகங்கள் ★
எமது ஏக விநியோகஸ்தர்களாக

★ V. வடிவேல் ★
(லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்)
219, 221, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

(C/2293)



அருளூறு நெஞ்சினில் அங்கயற் கண்களில்
ஆட்சி புரிந்திடும் தென்னவளே!

**நவீன வேலைப்பாடுள்ள அழகிய தங்கப் பவுண் நகைகளைப் பெற**

**சோபிகா நகை மாளிகை**
111-1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குலமுறும் எங்குடி ஓங்கியு யர்ந்திடக்
கோரினன் காஞ்சியின் கோமளமே!

★ மின் இணைப்புப் பொருட்கள்,
★ இயந்திர உதிரிப் பாகங்களுக்கு

**சிவா எலெக்ரிக்கல் ஸ்ரோர்ஸ்**
635, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

பொருளூறு புன்னகை பொங்கிட வந்தருள்
பூங்கணை யேந்திய பொன்மகளே

சுத்தமாகவும், சுகாதாரமாகவும், சுவையாகவும்
ஐஸ்கிறீம் வகைகள் சிற்றுண்டி வகைகள்
தயாரிப்பதில் யாழ்நகரில் முன்னணி வகிப்போர்

**ராஜா கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

இகமதில் சாந்தியும் இல்லற மேன்மையும்
ஈந்திட வந்தருள் ஈசையளே!

உங்கள் பதிப்பு வேலை எதுவாகினும்
நாடவேண்டிய இடம்

**சாந்தி அச்சகம்**
575, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23002.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு-இராஜராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) ரதோற்சவ மலர்



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 27-3-89 இல் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட புதிய வசந்த மண்டபம்.

## மந்தைகளால் இனம் காட்டப்பட்ட

## கண்ணகை அம்மன் ஆலயவரலாறு

புங்குடுதீவின் தென்புறத்திலே இந்து சமுத்திரக் கரையோரத்தில் கோயில் கொண்டு நினைத்த வரம் அருளும் கண்ணகை அம்மன் என விளங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோயில் நானூறு ஆண்டுக்குமுற்பட்ட பழைமையுடையது. அதன் வரலாறு புதுமை நிறைந்தது. அந்நாளில் இங்கு வாழ்ந்த சைவ வேளாண்குல முதல்வன் ஒருவன் மாட்டு மந்தைகளுக்கும் எருமைகளுக்கும் உரிமையுடையவனாக விளங்கினான். காட்டுக்கு மேயச் சென்று வரும் எருமைக்கூட்டம் ஒரு நாள் திரும்பி வரவில்லை. ஏவலாளர் பல திசைகளிலும் தேடி கடைசியாகச் சமுத்திரக் கரையில் எருமைகள் நிற்பதைக் கண்டனர். பெரிய பேழையொன்றைச் சுற்றி எருமைகள் நிற்பதை யுணர்ந்து ஆச்சரியமுற்றனர்.

அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தவர்கள் பெட்டியைக் கரைக்குத்தூக்கி வந்து பாறையின் மேல் வைத்துத் திறந்து பார்க்க முயற்சித்தனர். முடியவில்லை. எனவே மீண்டும் அதைச் சுமந்து வந்து சற்றுத் தூரத்தே நின்ற இத்தி மரத்தடியில் வைத்துவிட்டு இளைப்பாறி மீண்டும் சுமந்து வந்த பொழுது முன்னரிலும் அதிக பாரமாகத் தோன்றவே முடியாமல் அங்கு நின்ற பூவரச மரத்தடியில் இறக்கிவைத்து இளைப்பாறினார்கள். மீண்டும் பெட்டியைத் தூக்கமுயற்சித்த போது அசைக்க முடியாமற் போகவே அயற் கிராம மக்களிற் சிலரை அழைத்து வந்து மிகுந்த பிரயாசையுடன் அப் பெட்டியைத் திறந்தனர்.

அதனுள்ளே பெண் கற்சிலை ஒன்றும், சதங்கை ஆபரணமும் சிலம்புகள் சிலவும் தாமிரத்தாலாகிய ஒரு பெண் முகமும் சிறு காளி அம்மன் சிலை ஒன்றும் இருக்கக்கண்டு அனைவரும் அதிசயமும் பயமும் அடைந்தனர். அவ்வேளையில் அங்கு நின்ற பெண் ஒருவர் மீது தெய்வம் உரு ஏறித் தான் கண்ணகி ஆகிய பத்தினித் தெய்வம் என்றும், தன்னை ஆதரித்து வழிபாடு செய்வோர் அஷ்ட ஐசுவரியங்களையும் வேண்டிய வரங்களையும் பெறுவர் என்றும் கூறியது.

அதைக் கேட்ட மக்கள் அவ்விடத்திலேயே சிறு குடில் அமைத்து அன்றுமுதல் கண்ணகிஅம்மன் எனப் பத்தினித் தெய்வத்தை வணங்கி வந்தனர்.

ஆதியில் பூவரசு மரத்தின் கீழும் பின் சிறு கொட்டிலிலும் வைத்துப் பொங்கல் பூஜை முதலியன செய்து வழிபட்டு வந்த மக்கள், கண்ணகை அம்மனுக்கு ஓர் ஆலயம் அமைக்க எண்ணி சுண்ணும்புக் கட்டடத்தினால் ஆலயத்தை அமைத்துப் பனை ஓலையினால் வேய்ந்து கண்ணகை அம்மனை வைத்து வழிபட்டு வந்தனர்.

மலர் ஏற்பாடு:
மு. கனகசபாபதி
தயாரிப்பு:
ரி. பி. லிங்கம்

இவ்வாலயத்தை நல்ல முறையில் அமைக்க எண்ணிய பொதுமக்கள் 1895 ஆம் ஆண்டளவில் உடையாராக இருந்த திரு. இராமலிங்கம் கதிரவேலுவைத் தலைவராகக் கொண்டு கோவிலுக்குத் தேவையான மரம் முதலான பொருள்களையும் நிதியையும் பொது மக்களிடமிருந்து சேகரித்துக் கோவிலோடு சேர்ந்த மண்டபத்தினையும், மடப்பள்ளியையும் திருமஞ்சனக் கிணறு என்பவற்றையும் திருப்பணி செய்தனர்.

கடற்றொழில் செய்யும் அன்பர்களால் கோவிலுக்கும் மண்டபத்துக்கும் ஓடு போடுவித்தார்கள். பிற்காலத்தில் சுற்றுமதில், கொடிமரம் ஆகிய திருப்பணிகளையும், கடற்றொழில் செய்யும் அன்பர்களே செய்தார்கள். 6 ஆம் திருவிழா ஆகிய கப்பல் திருவிழா இன்று அவர்கள் உபயமாகவே நடைபெற்று வருகிறது.

பிற்காலத்தில் மடப்பள்ளி, பிள்ளையார் ஆலயம், சுப்பிரமணியர் ஆலயம், பைரவர் ஆலயம், பத்திரகாளி ஆலயம், அசையாமணி களஞ்சிய அறை, வசந்தமண்டகம், யாகசாலை ஆகிய திருப்பணிகளைக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியினரும் அவர்களோடு குடும்பத் தொடர்புடையவர்களும் நிறைவேற்றினர். இவ்வாறே ஒவ்வொரு திருப்பணியும் மக்களால் செய்யப்பட்டன.

ஆகம விதிப்படி ஆலயம் அமைக்கப்பட்ட பின்னர், 1931 ஆம் ஆண்டில் சிவஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் மூலாலயத்தில் இராஜ இராஜேஸ்வரி அம்பாளையும் தென்திசையாக சமுத்திரத்தை நோக்கி கண்ணகி ஆலயத்தில் கண்ணகை அம்பாளையும் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். அதன் பின் 1944 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சில வருடங்கள் கழிந்து செல்வந்தரும் கொழும்பில் பிரபல வர்த்தகரும் ஆகிய அமரர் திரு. மு. முத்தையாபிள்ளை 1957 ஆம் ஆண்டில் தர்மகர்த்தாக்களில் ஒருவராக ஆலய பரிபாலன் சபையால் தெரிவு செய்யப்பட்ட பின்னர், இக்கோவிலைப் புதுக்குவதற்குரிய பொறுப்பினை ஏற்கத் தாமே முன் வந்தார். சுண்ணும்புக் கட்டடமாக இருந்த முழுக் கோவிலையும் இடித்து மூலஸ்தானம் முதல் சபா மண்டபம் வரையிலுள்ள எல்லாத் திருப்பணிகளையும் பல லட்சம் ரூபா செலவு செய்து நிறைவேற்றி வைத்தார்.

திரு. மு. முத்தையாபிள்ளை அவர்களின் முயற்சியால் 1964 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

இன்று இராஜகோபுரம்வானளாவி நிற்பதன் காரணம் புதிய பஞ்சாயத்தினரின் தியாக சிந்தனையென்றே கூறலாம். சிறப்பாக "திருப்பணி வேந்தன்" திரு. நா. க. மயில்வாகனம் அவர்களும் சிவநெறிச் செல்வர் திரு. கு. செல்லையா அவர்களும் பஞ்சாயத்தில் முன்னின்றுழைத்தனர். அம்பிகை தந்த செல்வம் அவள் அரும்பணிக்குரியது என்றே செலவுசெய்கின்றனர். பெருநிதிக்கிழார் அமரர் மு. முத்தையாபிள்ளையின் மக்களும் ஆலயப் பணியில் பேரவாக் கொண்டுள்ளனர். இன்று அம்பாளின் அருளால் அயராது உழைத்து முன்னேறும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புரியும் ஆலயப் பணியை அளவிடமுடியாது. தேர்த் திருப்பணிக் குழுவில் முன்னின்று உழைத்த அன்பர்கள் பணி அளவிடற்கரிய பெரும்பணி சிவநெறிக்காவலர் திரு. சி. முத்துக்குமாரு அவர்களும், திரு. த. கிருஷ்ணசாமியும், ஆசிரியர் அ. க. கண்ணையா அவர்களும் இன்னும் பலரும் இடையறுது முயன்றதனால் எழுந்து நிற்கிறது. வண்ணச் சித்திர அழகுத் தேர்.

பழைய பத்திரகாளி கோயில் புதிய உருவப் பொலிவும் பெற்று எழுந்து நிற்கிறது. நாடோறும் அம்பாள் கோயில் வழிபாடும் பேறுபெற்ற பேரன்பர் திரு. க. செல்லத்தம்பி அவர்களும் இன்னும் சில அன்பர்களும்

[9ஆம் பக்கம் பார்க்க]



ஆதியில் புங்குடுதீவு தென்பகுதிக் கடலில் கரை ஒதுங்கிய கண்ணகை அம்மன் சிலை.

### புதிய தர்மகர்த்தா சபையினர்

தலைவர்: திரு. ந. செல்லத்துரை, துணைத் தலைவர்: திரு. இராமச்சந்திரன், செயலாளர்; திரு. கி. க. இலட்சுமணன், துணைச்செயலாளர்: திரு. கு. கனகலிங்கம், பொருளாளர்: திரு. க. மு. சி. சண்முகராசா, நிரந்தர தர்மகர்த்தாக்கள்: திரு. ச. இராசரத்தினம், திரு. ஆ. சபாரெத்தினம், திரு. நா. முருகேசு, திரு. மு. கிருபானந்தவாரி,

அன்னையே திருத்தேரூர்ந்து
அவனியைக் காக்க வரவேண்டும்!
லிங்கம்
கூல் பார் அன் கோப்பி பார்
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி)

முத்தே வரும் முத்தொழி லாற்றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்!
மளிகைப் பொருட்களின் வடபகுதிக் களஞ்சியம்
பிளாஸ்ரிக் பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்
மாகோ ஸ்ரோர்ஸ்
3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24132

தேர்மீதிலே வரும் கண்ணகை அம்பிகை
மலர்பதம் போற்றி! போற்றி!!
சகலவிதமான அழகுசாதன - அன்பளிப்புப் பொருட்கள்,
சாய்ப்புச் சாமான்களுக்கு நாடவேண்டிய இடம்:
அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்
9 A, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே!
★ அறுசுவை உணவுகளுக்கு
அருமையான உணவகம்
தலைநகரில் தலைசிறந்து நிற்கும்:
சன்ரைஸ் கபே
96, பாங்ஷால் வீதி,
கொழும்பு - 11.

கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே வருவாய் அருள் தருவாய்!
சுவையுறு உண்டிகள்
எவையெவையென்று தேடி
உண்டிட நாடுங்கள்:
★ இந்துமதி லொட்ஜ் ★
201, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு - 3
தொலைபேசி: 545950

வேண்டும் வரம் தந்தருளும் நாயகியே
உன்தாள் பரவசமாய்ப் பணிந்திடுவோம்!
அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு
சோபனு ஜுவல்லறி
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முத்துநவ ரத்தின மிசைத்த மணித் தேரேறி
முதுவீதி வாருமன்னையே!
வார்ப்பு, அல்மேனியம், பிளாஸ்ரிக்
பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
ராஜா ரேட் சென்ர
3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எழில்வாரிப் புங்கைநகர் வந்த
கண்ணகிச் செல்வி இராஜ இராஜேஸ்வரியே!
★ சிறந்த வேலைப்பாடுள்ள
★ தங்க நகைகளை
★ விரும்பிய டிசைன்களில்
தெரிவு செய்ய நாடுங்கள்
ஹப்பி ஜுவல்லறி
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே!
அன்பளிப்பு பொருள்கள், கோல்ட் கவறிங் நகைகள், விளையாட்டுப் பொருள்களை
சகாய விலைக்குப் பெற
அம்பிகாபதி பான்ஸி குட்ஸ்
66, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

எழிலான புங்கைநகர் தென்கரையில் தங்கிவாழ் இராஜராஜேஸ்வரி அம்மையே தேரேறி வருக!
★ பலசரக்குப் பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ சிமெந்து வகைகள்
★ கேக் சாமான்கள்
தரமாகவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளவும் சிறந்த இடம்:
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்ஷால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ★ நல்லூர் ஸ்ரீ கைலாஸநாத பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா சிறப்பிதழ் ★



கைலாசநாத பிள்ளையார் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் மூலமூர்த்தியின் திருவுருவம்.

## அருள் சுரக்கும் ஐங்கரன்

# இன்று தேரேறித் திருஉலா!

நல்லூர் ஸ்ரீ கைலாஸ நாத பிள்ளையார் ஆலயம் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு மிக்கது, புகழ் வாய்ந்தது. இங்கே வழிபடும் அடியார்களின் இடர் நீக்கி, துன்பம் போக்கி, துயர் களைந்து விக்னேஸ்வரராக வீற்றிருந்து ஆங்காரம் நீக்கும் ஓங்கார விநாயகராக எழுந்தருளியுள்ளார்.

யாழ் மக்களின் புராதன வரலாற்றுப் பின்னணியை எடுத்துக் கூறும் 'யாழ். வைபவமாலை' என்ற சரித்திர நூலின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்குமிடத்து, நல்லூர் கைலாசநாதபிள்ளையார் ஆலயம் ஆரம்பகாலந்தொட்டு கைலாசநாதர் சமேத கைலாச நாயகி அம்மன் எனப் பெயர் கொண்ட ஒரு சிவாலயம் என்பது புலனாகின்றது.

பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியால் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறு கூறும்,

மஹோற்சவ காலத்தில் சுவாமி புறப்பாடாகும் போது கூறப்படும் கட்டியத்தில் இம்மன்னனின் பெயர் இடம் பெறுவதை இன்றும் காணக் கூடியதாயுள்ளது.

இம்மன்னனின் திருப்பணியாக இந்த ஆலயத்தில் மூன்று சபைகள், பரிவார மூர்த்திகள், தேரோடும் வீதி, அடியார்கள் திருமடம், சுற்று மதில் ஆகியன ஆகமப் பிரமாணத்துக்கமைய அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியன் போர்த்துக்கேயரால் சிறைப்பட்டு கொலையுண்டபின் பரவலாகப் பல ஆலயங்களும் பரிநாசமாக்கப்பட்டன. ஆனால் அன்று பறங்கியருக்குப் பக்கபலமாக நின்ற பரராஜசிங்க முதலியின் பராமரிப்பில் நல்லூர்ப் பகுதி இருந்ததால் அவன் உயிருடன் உள்ள காலம்வரை இவ்வாலயத்துக்கு ஓர் இன்னலும் ஏற்படவில்லை.

பரராஜசிங்க முதலி இறந்த பின் இப்பகுதி பறங்கியரின் நேரடி பரிபாலனத்தின் கீழ் வந்தது. நல்லூரில் இருந்த ஏனைய ஆலயங்களைப் போன்று இவ்வாலயமும் அந்நாளில் அழிக்கப்பட்டு ஆலயம் சிதைக்கப்பட்டது.

அவ்வேளை ஆலய அர்ச்சகர்களாக இருந்த காசிப் பிராமணர்கள் மூலமூர்த்திகளையும் பரிவாரமூர்த்திகளையும் எடுத்துச் சென்று நீர்நிலைகளிலும் நிலத்துக்கடியிலும் மறைத்து வைத்தனர்.

### 19 ஆம் நூற்றாண்டில்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் இக்கோயிலின் எஞ்சிய இடிபாடுகளுக்கிடையே அடர்ந்து வளர்ந்த பற்றைக்குள் இறைவனின் திருவருளால் கைலாசநாத பிள்ளையார் திருவுருவம் கண்டெடுக்கப்பட்டது. நல்லைநகர் மக்கள் ஆனைமுகம் கொண்ட ஐங்கரநாதனை ஒரு வில்வமரத்தடியில் வீற்றிருக்கச் செய்து விருப்புடன் பூசித்தனர்.

### கும்பாபிஷேகம்

சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுகநாவலர் 1850 ஆம் ஆண்டளவில் வில்வமரத்தடியில் இருந்த பிள்ளையாருக்கு ஓலையால் ஒரு சிறு மண்டபம் அமைத்துக் கோயிலாக்கினர். அதன் பின் அவரின் மருகர் திரு. காசிப்பிள்ளை அக்[illegible]யிலைக் கற்கோயிலாக மாற்றினர். அதனைத் தொடர்ந்து அடியார்களின் அயராமுயற்சியால் புதிய சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமும் செய்து வைக்கப்பெற்று சிறப்பு மிகுந்த சிவாலயமாக விளங்கியது.

1946 முதல் ஆகம முறைப்படி ஆலயத் திருப்பணிகள் செய்யப் பெற்று புதுப்பொலிவுடன் திகழ்ந்த ஆலயம் 1987 இல் ப[illegible]ம் அழிவுக்குள்ளானது. [illegible]ன் பின்பும் அடியார்களது பெருமுயற்சியினால் திரும்பவும் திருப்பணிகள் செய்து 15-9-88 இல் மஹா கும்பாபிஷேகம் செய்யப் பெற்று இப்பொழுது மஹோற்சவமும் நடைபெறுகிறது.

சித்திரையில் விநாயகப் பெருமானுக்கும் ஆனியில் ஆலமுண்ட நீலகண்டனுக்கும் சிறப்பு உற்சவங்களும் ஆடிப் பூரத்தை ஆதாரமாகக் கொண்டு அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறுவது வழக்கம்.

மார்கழியில் பிள்ளையார் கதை, விநாயக சதுர்த்தி மற்றும் தைப்பூசம் முதல் திருவாதிரைவரை மாதாந்த உற்சவங்கள் அனைத்தும் இங்கு சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

வருடந்தோறும் நடைபெறும் அறவழி யாகங்கள், அபிஷேக ஆராதனைகள் ஐங்கரனார் அடியவர்களுக்கு பிசகாது அருள் சுரக்கும் ஆனந்தத் திருநாள்களாகும்.

விரும்பித்தொழுவார் வினை தீர்க்கும் விநாயகப்பெருமானும், கைலாசநாதரும் அடியார்க்கருளும் நோக்கோடு இங்கு எழுந்தருளி இன்னருள் புரிகின்றனர். இன்று வினை தீர்க்கும் விநாயகர் சித்திரத் தேரேறி ஆரோகணித்து அடியார்க்கருளும் காட்சி அருட் காட்சியாகும்.

'வேழமுகத்து விநாயகனைத் தொழுவாழ்வு மிகுத்துவரும்' என்பதற்கிணங்க ஆனைமுகனின் அடிபரவி. அடிபணிந்து அவனருள் பெறுவோமாக!

★

தொகுப்பு;
**நிதர்சன்**

### கயிலாய நாத கணபதீ!

ஈசியோ டீச னுரை
இனிது நீ வலம்வந் தன்று
ஆசில்மாங் கனியைப் பெற்று
அளவிலா னந்தங் கொண்ட
தேசொளிர் கயிலாய நாத
கணபதி! தேர்மீ தேறி
மாசிலா அடியா ருக்கு
மாண்பினே டருள்வாய் ஐயா!

— கவியரசு வெண்பாமணி
முருகசூரியன்

(ஈசி = உமை, பார்வதி, ஆசு = குற்றம்,
தேசு = பிரபை. மாசு = குற்றம்.
கண பதி = கணங்களின்தலைவன்.)


விக்கினம் நீக்கிடும் விநாயகனின்
அருள் வேண்டி நிற்கும்

Λ
V

**Yoku Trading Co.**

332, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கைலாசநாத பிள்ளையாரைக் கைதொழுது வணங்கிடுவோம்!

- செரமிக் கூட்டுத்தாபனப் பொருள்கள்
- எலக்ரிக் பொருள்கள்
- நவநாகரிகர்களுக்கு ஏற்ற வீட்டுத் தேவைக்கான மாபிள் வகையான பொருள்கள் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**நியு விமாகி**

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வினை தீர்க்கும் விநாயகரின் திருவருளை
இறைஞ்சுகின்றோம்!

- தரமான சிற்றுண்டி வகைகள்
- குளிர்பான வகைகள்
- பலதரப்பட்ட ஐஸ்கிறீம் வகைகள்

அத்துடன் சுவைத்து மகிழ
ரவர் ஸ்பெஷல் பீடா

**ரவர் கோப்பி & கூல் பார்**

324, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்.

தேர் ஏறிவரும்
கைலாச பிள்ளையார் அருள்
அனைவருக்கும் கிடைக்க
வேண்டுகின்றோம்.

சகலவிதமான
டெக்குகளுக்குரிய கெட் (Head)
டுகளும் எங்களிடம் உண்டு.
உடனடியாக உங்கள் டெக்குகளில்
பொருத்தித் தருகின்றோம்.

**எவர் விஷன்,**

21ஏ, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் கைலாசநாத பிள்ளையாரின்
அருள் கிட்டுவதாகுக!

**அ. பொன்னுத்துரை ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு & தேநீர்க்கடை

176, கைலாசபிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,

இன்று தேரேறி வரும் கைலாசவிநாயகனை
வாழ்த்தி வணங்குகின்றோம்

**குகன் ஸ்ரோர்ஸ்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இன்று தேரேறி வந்து அருள் பாலிக்கும் வல்ல வினைபோக்கும்
நல்லை கைலாசநாத பிள்ளையாரின் அருட் கடாட்சம் -
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சீரும், சிறப்பும், வளமும், மங்களமும் பொழிவதாக!

SU

**ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்**

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805.

61, பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு - 4
தொலைபேசி: 589310, 500576.


மூத்தவனே முதல்வனே ஞானக் கொழுந்தனே
காத்து எமக்கருளும் கைலாச பிள்ளையாரே
நாற்றிசையும் உதயன் நனிபெறவே நாமுன்னை
போற்றிப் பரவுகின்றோம் ஐங்கரனே ஓங்காரா!

**உதயன் - சஞ்சீவி - அர்ச்சுனா**
**ஞானக்கதிர்**

வெளியீட்டாளர்கள்:
நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்


நல்லூர் கைலாஸ நாத பிள்ளையார் தேரேறி வந்து திருவருள் புரிய வேண்டுகின்றோம்

கோயில்

**உற்சவ தேவைப் பொருள்கள்**

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ் - மருந்துக்கடை,**

பஸ் நிலையத்துக்கு அருகில்,
175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An associate of The Maharaja Organisation Limited 1939-1989 50 YEARS The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe



SLS

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93716 - 9


## மருது, நாவல் - - - - -

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைலாச வாகனம், மஞ்சம், சப்பை ரதம் (சப்பரம்), குதிரைவாகனம், பூந்தொட்டி அன்னவாகனம், சர்ப்ப வாகனம், செந்தாமரைப்பூ, காமதேனு, சிங்கம், ரிஷபம், மயில் கிளி, தண்டிகை, கேடகம் முதலிய வாகனங்கள் உண்டு. தீர்த்தோற்சவம், நடைபெறுவதற்கு ஒரு திருக்குளமும் உண்டு. இந்த தீ திருக்குளம் வண்ணை - கந்தர் (உடையார்) அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது. கி. பி. 1970ஆம் ஆண்டு வரை உபயோகத்தில் இருந்த ரதம் (தேர்) பழுதடைந்து விட்டபடியால் திருப்பணி உப சபையின் அரும் பணியாலும், அம்பிகையின் கிருபாகடாட்சத்தாலும் அன்பர்களின் பண உதவியாலும், பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் புதிய, அதாவது மரத்தில் செதுக்கப்பட்ட சிற்ப அமைப்புவாய்ந்த உருவங்களால் நிரப்பப்பெற்றிருக்கின்ற அடித்தளங்களையுடையதுமான ஒரு சித்திரத்தேர் கட்டப்பட்டு, வெள்ளோட்ட வைபவமும் நடத்தப்பெற்றது கி. பி. 1971 ஆம் ஆண்டு தொடக்கம் தேர்த்திருவிழாவன்று ரதோற்சவ தினத்தில் இப் புதிய சித்திரத்தேரில் இறைவி அகிலாண்டகோடிப் பிரமாண்டங்களின் நாயகியாகிய ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை விநாயகர், பாலசுப்பிரமணியர், சண்டேஸ்வரி புடைசூழ வீதிவலமாய் எழுந்தருளி பக்த கோடிகளுக்குத் திருக்காட்சியளித்து இஷ்ட சித்திகளைக் கொடுத்தருளுகின்றாள்.

இன்னும் தேர் விடுவதற்கு பிரமாண்டமான கட்டிடமும் தேர் ஓடும் வீதியும், செவ்வனே அமைக்கப்பட்டிருக்கின்றன. தேர் முட்டி கட்டுவதற்கும், தேர் ஓடும் வீதியைச் செவ்வனே அமைப்பதற்கும் இடம்போதாதிருந்த வேளையில் திரு. அம்பலவாணர் கண்ணுத்துரை தேவையான காணியைத் தந்துதவியும், தேர்முட்டிக்கு அருகாமையில் இருந்த கிணற்றைப் புனருத்தாரணம் செய்தும் அன்பளிப்புகள் செய்துள்ளார்கள்.

இன்று 19 ஆம் திகதி சித்திரத் தேரேறி சிங்காரப் பவனி வரும் சிருங்காரக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். கணபதி, சுப்ரமண்யர் சமேதராக ஆரோகணித்து வந்து இன்னல் தீர்த்து இடர் போக்கி இருளகற்றி இன்னருள் புரியும் அவளது கருணையையே நாடி நிற்போமாக.

[கட்டுரையின் பெரும்பகுதிக்குரிய ஆதாரங்கள் 1979 இல் இராஜகோபுர திருப்பணிச்சபையினரால் வெளியிட்ட நூலில் திரு. வி. நடராசா எழுதிய கட்டுரையில் இருந்து எடுத்துத் தொகுக்கப்பெற்றது]


### ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 25-4-1989 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சட்டட சழிவுப் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் வெற்றி பெறுவோர் முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி ஏலத்தில் வெற்றி பெற்ற பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

பிரதிப் பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
[ஏ]5199]



அச்சுவேலி சித்திரவேலாயுதர்
(கந்தசாமி)

### தேர் பவனி வருவதை முன்னிட்டு



எமது
அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
ஏகவிநியோகஸ்தர்கள்
சகலருக்கும்

அச்சுவேலி சித்திர வேலாயுதர் அருள் பாலிக்கும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம்.

★ தேவி அரிசி ஆலை ★
அச்சுவேலி.

உரிமையாளர்
வே. முத்துலிங்கம்

[10558]




# சிங்கார வாழ்வுக்கு சிங்கர் வழிகாட்டி


மரத் தளவாடங்களால் மனங் கவர் கோலங்களில் மனைகளை அலங்கரிக்க சிங்கர் வழங்கும் சிங்கார வழி - அழகான வரவேற்பறை ஆசனங்கள் முதல், சுவர் மூலை நிலைக்காலிகள் வரை... உறுதியான மெருகிட்ட பலகைகளால் உருவாக்கிய மிகச் சிக்கன விலைத் தளவாடங்கள்.
சிங்கார வாழ்வுக்கு சிங்கர் தரும் இந்த வழிகாட்டியைப் புரட்டிப் பார்த்து, சாவதானமாகத் தேர்ந்தெடுங்கள்.
உங்கள் மனைக்கு மங்கலம் சேர்ப்பது சிங்கர்,



சுவர்மூலை நிலைக்காலி
ரூ. 890/=



தொலைக்காட்சிப் பெட்டி நிலைதாங்கி
ரூ. 1690/=



புத்தக அடுக்கலுமாரி
- ரூ. 1890/=



தேநீர் பரிமாறும் சக்கரச்சிறு மேசை
ரூ 1590/=



நிழல்மூடி கொண்ட விளக்குக் கம்பம்
ரூ. 940/-



லாச்சி அலுமாரி
ரூ. 3,290/=




ஒப்பனை மேசை
ரூ. 3,190/-

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**செல்வன் சண்முகதாஸ் விஜயகுமார்**
**(மாம்பழம்)**

**தோற்றம்:** 03-12-1967　　**மறைவு:** 30-04-1988

எமது அருமைத் திருமகனே! அன்பின் விளக்கே! அணையாத தீபமே! அழகின் இருப்பிடமே! தெய்வத்தை என்றும் மறவாத தித்திக்கும் தேனே! நின்னைப் பிரிந்து நாம் படும் துயரம் யார்தானறிவார். வருங்காலத்தில் எமது குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்வாயென மனப்பால் குடித்தோம். நீர்வேலிக் கந்தன் ரதோற்சவத் தினத்தன்று அங்கப்பிரதிஷ்டை செய்து வழிபட்ட நின்னை யமதூதர் போல் வந்து உன்னை எடுத்துச் சென்று நின்னுயிரைப் பறித்தனரே. ஆறுத் துயரம் எப்பதான் மாறுமோ. கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்கிறோம். நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கிறோம்.

அன்புக்குரிய தந்தை - தாய்,
நீர்வேலி.　(181)　சகோதரர்கள், உற்றார், உறவினர்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினால் யாழ். இந்துக் கல்லூரியில் அமைக்கப்பெற்ற சிவஞான வைரவர் கோயிற் குடமுழுக்கு நிகழ்ச்சியை ஒட்டி சிவஞானத் தமிழ் விழா ஒன்று நடைபெற்றது. அவ்விழாவின் நிறைவு நிகழ்வின்போது கல்லூரி நிறுவுநர் வழித்தோன்றலும், கல்லூரி ஆசிரியரும் குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெற அயராதுழைத்தவருமான புலவர் சி. செ. சோமசுந்தரத்திற்கு அவரின் சேவையினைப் பாராட்டி யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் ''சிவனருட்செல்வன்'' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

யாழ். இந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. க. பூபாலசிங்கம், பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. டிவகலாலா, கல்லூரி பிரதி அதிபரும், பழைய மாணவர் சங்க உப செயலாளருமான திரு. நா. சோமசுந்தரம் ஆகியோர் திரு. சி. செ. சோமசுந்தரத்திற்கு விழா மேடையில் மலர்மாலை அணிவித்து கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## சிறமையை வளர்க்க வேண்டும் பகைமையை வளர்க்கக் கூடாது

விளையாட்டுக்கள் விளையாட்டு வீரர்களின் உடல் உறுதியை மட்டுமல்லாமல் சிறந்த பண்பை நல்ல பழக்க வழக்கங்களை, குணதிசயங்களை உருவாக்குவதுடன் அவர்களிடம் ஒரு தலைமைத்துவத்தையும் ஏற்படுத்துகின்றன. வீரம் தான் ஒரு விளையாட்டு வீரனின் விளை நிலமாக அமைவதால் வீரர்கள் அனைவரும் தமது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர ஏனையோருடன் பகைமையை வளர்க்கக் கூடாது''

எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலய இல்ல மெய் வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபரும் கொத்தணி அதிபருமான க. சிவபாதசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் எஸ். வரதராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கம்பர், வள்ளுவர், பாரதி இல்லங்கள் முறையே முதலாம் இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.　[க]

### மேல்மாகாண சபைக் கூட்டம்

மேல்மாகாண சபையின் கூட்டம் ன்று 19 ஆம் திகதி விஜயராம மாவத்தையிலுள்ள 'சவ்சிறிபாயா' சபாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேல் மாகாண, மாகாண சபை அலுவலகங்களுக்கென ஒரு தனியான கட்டடத்தைப் பெறுவது தொடர்பான பிரேரணை உட்பட பல பிரேரணைகள் கொண்டுவரப்படவுள்ளன.　(இ-7)

### திருத்தலப் பாத யாத்திரை

நாலாவது முறையாக தென்மராட்சி திருத்தலப் பாதயாத்திரை 23 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

திவயஜீவன சங்கத்தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் செல்லும் இக்குழுவினர் சுமார் 250 திருத்தலங்களைத் தரிசிப்பார்கள்.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்தில் இருந்துபுறப்படும் இப்பஜனைக் குழுவினரை உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை சிவஸ்ரீ சு. ஜெகதீஸ்வரக்குருக்கள் நகராட்சிமன்ற ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோர் ஆசிகூறி வழியனுப்புவார்கள்.

### இரணைமடு ...

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேர், வள்ளல்கள் பலரின் உதவியுடன் நிறைவு பெற்றமை அற்புதமே.

27-6-1988 இல் சித்திரத் தேர் திருப்பணி ஆரம்ப விழாக்கோலம் பூண்டு, நேற்று செவ்வாய்க்கிழமை (18-4-89) வெள்ளோட்ட விழாவும், இன்று சித்திரா பௌர்ணமியன்று சித்திரத் தேர்த்திருவிழாவும் இனிது நிறைவு பெற திருவருள் பாலித்துள்ளது. பத்துத் திங்களில் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா காண்பது அம்பாள் திருவருளே.

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''
மங்களம்! மங்களம்! மங்களம்!


★ அஜந்தா ஜுவல்லர்ஸ் ★
138/4 கோவில் வீதி,
நல்லூர் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

★ அன்பர்கள், ★ ஆதரவாளர்களே!
★ வாடிக்கையாளர்களே!

உங்கள் நகைகளை குறித்த தவணையில்
சிறந்த முறையில் ஓடர் நகைகளை பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்:
அஜந்தா ஜுவல்லர்ஸ்
[10535]

கப்பலில்
★ வேலை வாய்ப்புக்கள் ★
நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●
★ 2nd Officers ★ Bosan
★ 3rd Engineer ★ Oiler
★ Radio Officers ★ AB
மேற்காணும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.
★ சுவிஸ் ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி
★ டென்மார்க்
ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
விபரங்களுக்கு:
NATIONAL SHIPPING & TRAVELS,
New Lalitha Building,
185/2, KASTHURIAR ROAD.
JAFFNA.
(C/2282)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகமணி சிவஞானம்**

**மலர்வு:** 30-05-1944　　**உதிர்வு:** 12-05-1987

அன்பின் அமிர்தமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
இல்லத்தின் ஒளிச்சுடராய்
விளங்கிய எமது அறிவுச் செல்வமே!
எம்மை விட்டுப்பிரிந்து இரு ஆண்டுகள்
காலங்கள் கரைந்தாலும் எம்மிதயத்தில்
பதிந்த உம் நினைவுக் கோலங்கள்
என்றும் அழியவில்லை. மீண்டும் நீ
எங்களிடம் வர இறைவன் கருணை கூர்வாராக
என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உன் பிரிவால் வாடும்:
மனைவி, பெற்றோர்,
மகன், சகோதரர்கள்,
மச்சான்மார், மருமக்கள்.

புதுத் தோட்டம்,
தெல்லிப்பழை.　[164]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னப்பா நவரட்டணசாமி**
வைத்திய ஆய்வுகூட நுண்கலைஞர்
(M. L. T.)

**மலர்வு:** 15 - 11 - 1928　　**உதிர்வு:** 30 - 04 - 1988

**திதி:** 19 — 04 — 1989

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் உற்றாருக்கு சேவகனாய் எமது இதய ஒளிவிளக்காய் எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்பு நினைவும் அருள் வடிவமும் எங்கள் இதயங்களை விட்டு என்றென்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'வெல்லிக்கம் தோட்டம்'
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
[10609]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
**புவனேஸ்வரி கைலாயபிள்ளை**

**அன்னையின் மடியில்:** 03 - 10 - 1927　　**ஆண்டவன் அடியில்:** 21 - 03 - 1989

இமைசளை மறந்த விழிகளாய்
விழிகளை இழந்த முகங்களாய்
முகங்களை தொலைத்த பாவிகளாய்
பாரினில் எங்களைத் தவிக்கவிட்டு
அவ்வுலகம் ஏன் சென்றாயோ?
உந்தன் உறவிழந்த துன்பமதால்
வருந்துகின்றோம் அன்னையே
இனி இறைபாதம் சேர்ந்திருக்க
வணங்குகின்றோம் தாயே!

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் 20 - 04 - 89 வியாழக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், சகோதரங்கள்,
பேரப்பிள்ளைகள் பெறுமக்கள்.

29/1, கடையிற் சுவாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
[சி-2281]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

பொதுநலந்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்,

**பொருள்:**

புத்திக் கூர்மையினுற் சிறந்த அறிவாளிகள், பொது மக்கள் அழகுபடுத்திக் கொள்ளும் விலைமாதருடைய அற்பசுகத்தில் அகப்பட்டுக் கொள்ளமாட்டார்கள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
19- 04 - 1989 த. பெ. இல: 23

# கல்வி மறுசீரமைப்பு மலையகத்திற்குத் தேவை

மலையகத்தில் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இப்போது ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகிறது. அதனை நிவிர்த்தி செய்யும் பொருட்டு ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடாகி உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட ஆயிரம் பேர்களையும் தெரிவு செய்து நியமனங்கள் வழங்குவதற்காக இப்போது நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மாதம் முடியும் வரை நேர்முகப் பரீட்சைகள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் நியமனம் திறமை அடிப்படையில் நடப்பதாக இருந்தால் அதனை வரவேற்காமல் இருக்க முடியாது. ஏனெனில் கடந்த பல வருடங்களாக, அரசாங்கப் பதவிகளுக்கு திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடக்கவில்லை.

அரசியல் ஆதரவு, அதிகாரிகள் செல்வாக்கு, பணம் கைமாறல் ஆகியவையே அரசாங்க நியமனங்களை நிர்ணயிக்கும் தகுதிப் புள்ளிகளாக விளங்கின. இவை உத்தியோகபூர்வமாக, சட்ட ரீதியாக இல்லாவிட்டாலும், நடைமுறையில் அப்படியே பிறழ்ச்சி இல்லாமல் பின்பற்றப்பட்டு வந்தன.

மலையகத்தில், தமிழர் வாழும் தோட்டப் பகுதிகளில் கல்வி நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. இப்போது கூடப் பெரிதாக விருத்தி கண்டுவிட்டதாக, தோட்டத் தொழிலாளி ஒவ்வொருவரின் பிள்ளையும் சுமாரான கல்வி அறிவைப் பெறும் நிலை உருவாகிவிட்டதாகச் சொல்லமுடியாது.

தோட்டப் பகுதித் தமிழ் மக்கள், சமூக அரசியல் துறைகளில் தேசிய நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதன், புறக்கணிக்கப்பட்டதன் விளைவே அவர்கள் கல்வி நிலை கீழ் மட்டத்தில் நிரந்தரமாக நிற்கக் காரணம் ஆகும்

மலையகத் தமிழர்களை அடிமைகளாக, காலனித்துவ ஆட்சிக்கால நிலையிலேயே தொடர்ந்து வைத்திருக்க விரும்பிய சிங்கள அரசுகள் அவர்களது அரசியல், சமூக உரிமைகளை வழங்காமல் பார்த்துக் கொண்டன. அதன் விளைவாக மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது, மிகச் சில மாதங்களுக்கு முன்னர் மலையகத் தமிழர் வாழ்வில் மாற்றங்கள் வருவதற்கு வித்திடப்படும் என நம்பப்பட்டது. ஆண்டுகள் பலவாக மறுக்கப்பட்ட பிரசா உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் இன்னும் சரிவர நடைமுறைக்கு வந்து பயன் கைக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் வாக்குரிமை இன்னும் வழங்கப்படவில்லை. அதுவும் கிடைத்தால் தான் மலையகத் தமிழரின் வாழ்க்கையில் ஒரு புதிய மாற்றத்தைக் காண மார்க்கம் பிறக்கும்.

மலையக மக்களின் தொழில் நிலைமை, குடியிருப்பு சுகாதாரம் உட்பட்ட வாழ்க்கை நிலை பொருளாதார நிலை, கல்வி நிலை என்பவற்றில் பல படிகள் தாண்டிச் செல்ல வேண்டி உள்ளது.

முக்கியமாக கல்வி நிலை உயர்த்தப்பட்டால், ஏனைய துறைகளில் முன்னேற்றம் காண அது மூலாதாரமாக விளங்கும். எனவே மலையகத் தமிழ்ச் சிறுர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட இன்னும் பல காத தூரம் நடக்க வேண்டும். ஆசிரியர் நியமனம் மட்டும் போதாது.

முழு மாற்றத்துக்கும், மறுமலர்ச்சிக்கும் உதவும் விதத்தில் மலையகத் தமிழரின் கல்விச் சேவை விசேட கவனம் செலுத்தப்பட்டு மறு சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

# பூசை சாதனங்கள இல்லாதது சமய வளர்ச்சிக்கு பெருங்குறை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

'சைவசமய மக்களின் வழிபாட்டுத் தலங்களாக கிராமங்களில் இலைமறை காயாக இருக்கின்ற சிறிய ஆலயங்களில் நேரகாலத்திற்குரிய பூசைகளை நடத்தி ஆராதனைகள் செய்வதற்கேற்ற தீபங்களும் பிறசாதனங்களும் அவ்வாலயங்களில் இல்லாதிருப்பது சைவசமய வளர்ச்சிக்கு மிகப்பெரும் குறைபாடாகும்'

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டத்து பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கென ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான அழகிய பட்டுக் குடை ஒன்றையும் தீபாராதனைக்கேற்ற பல கற்பூர தீபங்களையும் அன்பளிப்பாக வழங்கியபொழுது துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி ஆலயத்தின் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. வி.கே. செல்வநாயகம் தலைமையில் சென்ற திருப்பணிச் சபைக் குழுவிடம் மூவாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்களை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்பளிப்பாக வழங்கினுர். [க]

## திறப்புவிழா

புங்குடுதீவு, ஏப்ரல் 19

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் அருகாமையில் பல இலட்சம் ரூபா செலவில் நவீன முறையில் அமைக்கப்பட்ட இந்து கலை கலாசார மண்டபத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. (இ-131)

# கூடுதல் ஜனநாயக உரிமை கோரி தடையை மீறி சீனமாணவர் பேரணி

பீகிங், ஏப்ரல் 18

கூடுதல் ஜனநாயக சுதந்திரம் கோரி சீனுவில் தலைநகர் பீகிங்கில் மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இரண்டு தினங்களாக நடைபெற்றன.

சீனக் கம்யூனிஸ்ட் தலைவராக இருந்து சில தினங்களுக்கு முன் காலமான யூ-ஹீ-பொங்கின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக இந்த பேரணிகள் நடத்தப்பட்டாலும், பின்னணியாக ஜனநாயக சுதந்திர உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே இவை அமைந்தன.

பீகிங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் நள்ளிரவில் பேரணியை ஆரம்பித்தனர். நான்கு பணித்தியாலங்கள் நகரின் மத்திய பகுதியில் கோஷங்கள் எழுப்பிய வண்ணம் சுலோக அட்டைகளைத் தூக்கியபடி சென்றனர்.

பின்னர் பீகிங்கில் உள்ள அரசு மண்டபம் முன்னுல் 200 இளைஞர்கள் அமர்ந்து இருந்தனர்.

ஏழுகோரிக்கைகள்கொண்ட மகஜர் ஒன்று மாணவர் சார்பில் அரசு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில்- "பேரணிகளை நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும்; சுதந்திரமாக பத்திரிகைகள் வெளியிட அனுமதி வழங்கப்படவேண்டும்"— என்று கோரப்பட்டிருந்தது.

காலமான சீனத் தலைவர் யூ-ஹீ-பொங்கின் கடந்தகால சேவைகள் மீளாய்வு செய்யப்பட்டு அவர் கௌரவிக்கப்பட வேண்டும் எனவும் ஜனநாயகம் மற்றும் சுதந்திரங்கள் மதிக்கப்படவேண்டும் என்றும் அம்மகஜரில் இடம் பெற்ற ஏனைய கோரிக்கைகளாகும்.

தடையை மீறி மாணவர்கள் பேரணிகளைத் தடுக்க பொலீஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. (எ)

## சோவியத் துருப்புக்கள் வாபஸ்

மாஸ்கோ, ஏப்ரல் 18

கிழக்கு ஜேர்மனியில் இருந்து சோவியத்துருப்புக்கள் வெளியேற உள்ளன.

முதலாவது தொகுதி வருகிற மேமாதம் 11 ஆம் திகதி வெளியேறும்,

கிழக்கு ஜேர்மனியில் இருந்து 10 ஆயிரம் துருப்புக்களுடன் ஆயிரம் டாங்கிகள், 330 மோட்டார் மற்றும் கனரக ஆயுதங்கள், 5 ஆயிரம் வாகனங்களும்வருகிறஆகஸ்ட்டுக்கு முன்னர் திருப்பி அழைத்துக்கொள்ளப்படும் என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. (எ)

30 பேரைப் பலிகொண்ட

# மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச் சம்பவம்; வழக்கு விசாரணை இறுதிக்கட்டத்தில்!

சென்னை, ஏப். 18

சென்னை விமான நிலையக் குண்டு வெடிப்பு வழக்கு விசாரணை முடிவடையும் தறுவாயில் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 2.8.84 அன்று வெடிகுண்டு வெடித்தது. அதில் 30 பேர் உயிரிழந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக ஐவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் முன்னுள் பயிற்சி விமானி அவர் பெயர் திரு. சரவணபவன். இலங்கையைச் சேர்ந்தவரான இவர் மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறுர்.

குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள ஏனைய 4 பேரில் ஒருவர் பொலீஸ்காரர் சந்திரகுமார். எயர் - லங்கா ஊழியர்களான விஜயகுமார், லோகநாதன். துரையைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் ஏனைய எதிரிகள் ஆவர்.

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நீதிபதி சந்தானகிருஷ்ணத்தில் விசாரணை நடந்து வருகிறது. மாணவர் சரவணபவனுக்காக வழக்கறிஞர் டி. எல். லட்சுமணரெட்டி ஆஜராகியிருக்கிறுர்.

மொத்தம் 130 சாட்சிகளில் முக்கியமானவர்கள் என்று கருதப்படும் 70 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு விட்டனர். எட்டுப் பொலீஸ் அதிகாரிகள் கடந்த 8 ஆம் திகதி சாட்சியமளித்தனர்.

வழக்கு மேல் விசாரணைக்காக இம் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

ஆந்திர மாநிலத்தில்

# 'விஸ்வாமித்ரா'வுக்கு போட்டி 'விப்ளவ மித்ரா' படம்!

ஹைதரபாத், ஏப்ரல் 18

'விஸ்வாமித்ரா' வுக்கு போட்டியாக ஆந்திரமாநிலத்தில் 'விப்ளவமித்ரா' தயாரிக்கப்படுகிறது.

மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் தேர்தல் பிரசாரத்துக்காக மகரிஷி விஸ்வாமித்ரரின் கதையை படமாக எடுத்து வருகிறுர்.

விஸ்வாமித்ரராக ராமராவும் மேனகையாக ஸ்ரீதேவியும் நடிக்கின்றனர்.

இதற்குப் போட்டியாக தெலுங்கு தேசம் கட்சியில் இருந்தும் சட்டசபையில் இருந்தும் ராஜினுமாச் செய்த சிகொண்டி வெங்கட்ராம ஜோகையா என்பவர் 'விப்ளவ மித்ரா' படத்தைத் தயாரிக்கிறுர்.

'புரட்சி நண்பன்' என்பது படத்தின் தமிழ்ப் பெயர்.

ராமராவ் அமைச்சரவையில் ஜோகையா உள்துறை அமைச்சராக இருந்தவர். (எ)

## வெளி உலகில்

# மன்ரோ - கென்னடி ரகசியம் பற்றி 'ஜாக்குலின் சரிதை' தகவல்

நியூயோர்க், ஏப்ரல் 18

'ஜாக்கி என்ற பெயருடைய பெண்' என்ற தலைப்பில் ஜாக்குலின் கென்னடியின் புதிய சுயசரிதை ஒன்று வெளியிடப்படவிருக்கிறது.

மறைந்த ஜனுதிபதி ஜோன் கென்னடியின் காதல் வாழ்க்கை பற்றிய பல இரகசியங்கள் இப்புத்தகத்தில் உள்ளன.

மறைந்த கவர்ச்சி நடிகை மர்லின் மன்ரோவுடன் திரு. கென்னடி ரகசியத் தொடர்பு வைத்து இருந்தது பற்றியும் இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டு உள்ளது.

ஒரு சட்டத்தில் மர்லின் மன்ரோ, கென்னடியைத் திருமணஞ் செய்து வெள்ளை மாளிகையில் குடியிருக்க வருவதாக உறுதியளித்ததால், கென்னடியை விட்டுப் பிரிந்து செல்லத் தயார் என்று ஜாக்குலின் அறிவித்தார் என்று நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை ஜோன் கென்னடி ரகசியமாக மன்ரோவைச் சந்திக்கச் சென்றிருந்தார். அதுபற்றி இரகசியப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கோ, அவர் அறிவிக்கவில்லை.

ஓர் அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டால் உடனே தொடர்பு கொள்ளுவதற்குத் தேவையான இரகசிய சைகைகளையும் கென்னடி அப்போது எடுத்துச் செல்லவில்லை.

இப்புத்தகத்தை டேவிட் ஹீமன் எழுதியிருக்கிறுர்.

புத்தகத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பற்றி ஜாக்குலினிடம் பத்திரிகையாளர்கள் கேட்டனர். அதற்கு அவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இப்புத்தகத்தை வாஷிங்டன் வாரப் பத்திரிகை 'ஸ்டார்' தொடராக வெளியிட்டு வருகிறது. [எ]

## அசோக்குமாருக்கு தாதாபால்கே விருது

1988ஆம் ஆண்டுக்கான தாதாசாஹிப் பால்கே விருது பழம்பெரும் நடிகர் அசோக் குமாருக்கு வழங்கப்படுகிறது.

திரையுலக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு இவ்விருது வழங்கப்பட்டிருப்பதாக மத்திய தகவல்துறை அமைச்சர் எச். கே. எல். பகத் தெரிவித்தார். [எ]

## மன்னர் ஹுசேன் அமெரிக்காவில்

வாஷிங்டன், ஏப். 18

ஜோர்தான் மன்னர் ஹுசேன் 4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று அமெரிக்கா சென்றுர்.

பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது சம்பந்தமான முக்கிய பேச்சுக்களை நடத்தவே மன்னர் ஹுசேன் வாஷிங்டன் சென்றிருக்கிறுர் என்று அறிவிக்கப்பட்டது, (எ)

மாணவரின் கல்வி அறிவு - பொது அறிவை விருத்தி செய்ய

# ஷெப்ரு யுனிக்கோ பினுன்ஸ் நிறுவனம் நடத்தும் சிந்தனைச் சக்கரம் நிகழ்ச்சி

கொழும்பு, ஏப்ரல் 19

ஷெப்ரு யுனிக்கோ பினுன்ஸ் நிறுவனத்தினர் மாணவரின் கல்வி அறிவையும் பொது அறிவுத் திறனையும் விருத்தி செய்யுமுகமாக ஞாயிறு தோறும் இலங்கை வானெலியில் சிந்தனைச் சக்கரம் எனும் நிகழ்ச்சியை கடந்த டிசம்பர் மாதம் முதல் நடத்தி வருகின்றனர்.

விரைவில் இப்போட்டி மாவட்டங்கள் தோறும் பாடசாலை மாணவருக்கு இடையே அகில இலங்கை ரீதியில் ஆரம்பத்தில் நுவரெலியா, ஹட்டன் கல்வி மாவட்டங்களில் இப்போட்டிகளை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நுவரெலியா இ.தொ.கா பணிமனையில் நடந்தது.

இதில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு தமிழ் பாடசாலைகளின் ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் ஷெப்ரு நிறுவன அதிகாரிகள், இ. தொ. கா பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைகள் மீண்டும் 2 ஆம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டதும் மேற்படி போட்டிகளை நடத்த ஏற்பாடாகி உள்ளது

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் நுவரெலியா, ஹட்டன் கல்வி மாவட்ட பாடசாலை அதிபர்கள் ஷெப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்டட் இல: 61, பௌத்தலோகமாவத்தை, கொழும்பு-4 எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-ா]

## மந்தைகளால் இனங்காட்டப்பட்ட...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனமகிழ்வுடன் பத்திரகாளி கோயிலை அமைத்துவிட்டனர். இன்றும் அற்புதமான திருப்பணிகள் ஆருக்கும் தெரியாமல் அம்பிகை செய்விக்கின்றுள்.

அம்பாள் ஆலயத்தைப் பேணி வளர்த்த பெருமகனுர் இரத்தின ஐயர் அவர்கள் இன்றிருந்தால் எத்தனை மகிழ்ச்சியடைந்திருப்பார். வழித்தோன்றல் சிவஸ்ரீ ப. கணேசராசக் குருக்கள் பிரதம குருவாக இருந்து ஆலய வளர்ச்சியில் முன்னின்று உழைத்து வருகிறுர்.

1970 ஆம் ஆண்டில் கொழும்பு வாழ் அன்பர்கள் நா. க. மயில்வாகனம், திரு. சி. கு. செல்லையா ஆகியோர் தர்மகர்த்தாக்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களுடன் ஏற்கனவே தர்மகர்த்தாவாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. மு. இராமச்சந்திரனும் இணைந்து கொழும்பு வாழ் பெருமக்களின் ஆதரவைத் திரட்டி திருப்பணிகளைச் செய்ய முன்வந்தனர்.

1957 ஆம் ஆண்டு இராஜகோபுரத் திருப்பணி இயக்குநர்களாக திரு. நா. க. மயில்வாகனமும், திரு. சி. கு. செல்லையாவும், செயற்பட்டு திரு. நாகநாதர் கந்தையாவினுல் இராஜகோபுரத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது.

இராஜகோபுரத் திருப்பணி பொதுமக்களின் ஆதரவுடனும் பேருதவியினுல் 1979 ஆம் ஆண்டில் நிறைவேறியது.

சித்திரத் தேர்த் திருப்பணிச் சபை நிறுவப்பட்டு அதன் இயக்குநராகத் திரு. சி. முத்துக்குமாருவும் அவர் மைந்தன் திரு. மு. கனகசபாபதியும், திரு. த. கிருஷ்ணசாமி, திரு. அ. க. கண்ணையா, திரு. ஆ. துரைச்சாமி, திரு. க. தியாகராஜாவும் செயற்பட்டு கொழும்பிலும், அகில இலங்கையிலும் பரந்து வாழும் அன்பர்களின் பேராதரவினுல் சித்திரத் தேர் ரதாரோகண மண்டபம் ஆகிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இராஜகோபுரத் திருப்பணியை அமரர் நா. தங்கவேலு ஆசாரியும் சித்திரத் தேர்த் திருப்பணியை சிற்பக் கலாமணியும் திரு ஆ. ஜீவரட்ணமும் நிறைவேற்றியிருக்கிறுர்கள்.

அம்மாளுக்கு 1979 இல் புதிய தேரை நிர்மாணித்த பெரியவர் சி. முத்துக்குமாரு அவர்களின் குமாரர்கள் 27 – 3 – 1989 இல் வசந்த மண்டபமொன்றை நிர்மாணித்து கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

அம்பாளின் திருவிழாக் காலங்களில் வருடாவருடம் அம்பாளுக்குத் தேவையான கடல்படு திரவியங்களான செல்வங்களும் திருவாடு தண்டுகள், பலகைகள், மரங்கள், தேர்வடங்கள் மற்றும் பொருள்கள் கடல் அலைகளால் அம்பாளின் கடற்கரையில் ... சேர்ப்பது ... அற்புத நிகழ்ச்சிகளாகும். ★

## அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி

வட்டுக்கோட்டை, ஏப்ரல் 19

வட்டுக்கோட்டை, மாவடி, அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு 'சிரிக்கும் கழகத்தினர்' வருடாந்தம் நடத்தும் தண்ணீர்ப் பந்தலும் வழமைபோல் இயங்கும். கழகத்தினர் ஆலயத் திருப்பணி நிதிக்கு அண்மையில் பணம் வழங்கினர். (அ)

## சமய நிகழ்ச்சிகளில்

## தேர்த்திருவிழா

கோப்பாய், ஏப்ரல் 19

நீர்வேலி கந்தசாமி கோவில் வருடாந்த இரத உற்சவம் இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-72)

## சித்திரை விழா

புங்குடுதீவு, ஏப்ரல் 19

புங்குடுதீவு பெருங்காடு மூத்தநயினுர் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை சித்திரைப் பௌர்ணமி விழா நடைபெறவுள்ளது.

அன்று அதிகாலையில் விசேஷ அபிஷேகமும், சமய சொற்பொழிவுகளும், சுவாமி வெளிவீதி ஊர்வலமும் இடம் பெறும்.

நண்பகல் அன்னதானப் பூசை நடைபெற்று அன்னதானமும் வழங்கப்படும். (இ-131)

## பெரிய போரதீவு நாகதம்பிரான் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

பெரிய போரதீவு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று புதன் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பித்து 8 ஆம் நாள் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் வைபவத்துடன் முடிவடையும். [ச]

## வற்றுப்பளை அம்மன்

முல்லைத்தீவு, ஏப்ரல் 19

சரித்திரப் பிரசித்தி பெற்ற அருள்மிகு வற்றுப்பளை அம்மன் தேவஸ்தானத்தில் பங்குனித் திங்கள் கடைசிநாள் வெகுசிறப்பாக நடந்தது.

பெரும் திரளான அடியார்கள் காலை முதல் மாலை வரை அம்மனைத் தரிசித்தனர்.

தீக்குளிப்பு, பறவைக் காவடிகள், பால் செம்பு ஆகியவற்றை பல அடியார்கள் நிறைவேற்றினர். (இ-92)

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவும் மாலை தீர்த்தத் திருவிழாவும் நாளை 20 ஆம் திகதி நடைபெற உள்ளன. [இ]

## தெல்லிப்பளை காசிவிநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

தெல்லிப்பளை காசி விநாயகர் தேவஸ்தான கொடியேற்ற வைபவம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.10 மணிக்கு நடைபெறும்.

தேர்த்திருவிழா 29 ஆம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தோற்சவம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

வைரவர் பொங்கல் மே மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. [ச]




இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது, அவை கலிமா, வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமிலர். முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதரும், அடியாரும், ஆகும் என சான்று பகர்தல், தொழுகையை தவறாது கடைப்பிடித்தல், [ஸகாத்] ஏழைவரியை வசதி படைத்தவர்கள் நிறைவேற்றல், றமழான் மாதத்தில் நோன்பு நோற்றல் வசதி படைத்தோர் புனித மக்கா சென்று ஹஜ் செய்தல் ஆகியனவாகும்.

ஸஹர் முடிவு - 4.26
நோன்பு திறக்கும் நேரம் - 6.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுகொள்ள நாடுங்கள்

# உதயன்

19 - 04 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதி[illegible]
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருளகள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## சிறிமாவுக்கு 73 வயது

கொழும்பு, ஏப்ரல் 19
எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த திங்கட்கிழமை தனது 73ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். [ஒ-எ]

## பொருளியல் கருத்தரங்கு

மன்னார், ஏப்ரல் 19
மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் அலுவலகத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை பொருளியல் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் மன்னார் மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கமும் இணைந்து இக் கருத்தரங்குக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர். [ஒ]

## நூல் அன்பளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஏப் 19
அமெரிக்க தூதர் திரு. ஜேம்ஸ் டபிள்யூ ஸ்பெயின் யாழ் பொதுசன நூல்நிலையத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்யும் வைபவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ் பாணம் நாவலர் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறும். (க)

## அலுவலகம் எரிக்கப்பட்டது

தலவாக்கொல்லையில் தமிழர் அமைப்பு ஒன்றின் அலுவலகம் இரண்டாவது முறையாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு இருந்த அலுவலகப் பொருள்கள் உட்பட சகல தளபாடங்களும் எரிந்து சாம்பலாகி விட்டன

புதுவருட தினத்தன்று இரவு இச் சம்பவம் நடைபெற்றது. அலுவலகத்தில் இரவில் ஒருவரும் தங்கி இருக்காததினால் விடிந்த பின்பே அது எரிக்கப்பட்டது தெரிய வந்தது. (அ-58)

## வெள்ளியன்றே சீராகலாம்

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ்ப்பாணநகர குழாய்நீர் விநியோகம் அனேகமாகவெள்ளிக்கிழமையே சீராகும் என தண்ணீர் விநியோகப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

பழுதடைந்த குழாய்களைத் திருத்தும்வேலைதிங்ட்கிழமை ஆரம்பமானபோதிலும், எதிர்பார்த்ததைவிடச் சேதம் அதிகமாக இருப்பதால் வெள்ளிக்கிழமை அளவிலேயே தண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (அ-9)

## பல்கலை மாணவர் 16பேர் விடுவிப்பு

கொழும்பு, ஏப்ரல்19
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தென்பகுதியைச் சேர்ந்த 16 பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டனர். (ஒ-எ)

# மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்க 25இல் சட்டமூலம் வருகிறது

கொழும்பு, ஏப். 19
இலங்கைக் குடியுரிமை பெற்ற சுமார் மூன்று லட்சம் மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்கும் சட்டமூலம் மாத முடிவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இவர்கள் முதலில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையைப் பெறுவர்.

அதற்கான முறையில் தேர்தல் இடாப்புக்களில் அவர்களின் பெயர்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ளன.

வாக்குரிமை அளிக்கும் சட்டமூலம் இம்மாதம் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று இந்து அறநிலைய துணைஅமைச்சர் திரு. பெரியண்ணபிள்ளை தேவராஜ் திருச்சியில் செய்தியாளரிடம் தெரிவித்தார். (அ-எ)

## 25 ஆயிரமாவது கண்தானம்

கொழும்பு, ஏப்ரல் 19
இலங்கை கண்தானச் சங்கம் விரைவில் 25 ஆயிரம் ஆவது கண்தானம் செய்யவிருக்கிறது.

இதுவரை 24ஆயிரத்து 768 கண்களை இச்சங்கம் பெற்றுத் தானமாக வழங்கியுள்ளது.

1964 இல் ஆரம்பமான இச் சங்கம் 54 நாடுகளுக்கு கண்களைத் தானம் செய்திருக்கிறது. கூடுதலான கண்கள் பாகிஸ்தானுக்கே வழங்கப்பட்டது. [உ-எ]

# இசைப்பட்டதாரி ஆசிரியர்: நியமன வயதெல்லை உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
இசைப் பட்டதாரி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிப்போருக்கான வயதெல்லை ஐந்து வருடங்களால் உயர்த்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகள் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றம், மற்றும் பதற்றநிலை காரணமாக வகுப்புக்களைத் தொடர்வதில் தாமதம் ஏற்பட்டது.

இதனால் அவர்களின் வயது அதிகரித்து, கல்வியமைச்சு வழங்கும் இசைப்பட்டதாரி ஆசிரியர் பதவிகளுக்கு நியமனம் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதுகுறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. யோகசங்கரி உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அதனை அடுத்தே இசைப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான வயதெல்லையை உயர்த்த ஏற்பாடு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பிரதி திட்டமிடல் பணிப்பாளர்

அரியாலை, ஏப்ரல் 19
யாழ். மாவட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக திரு. மாணிக்கவாசகர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுத் தமது பதவியை ஏற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

சிவன்கோவிலில் தேடுதல்:

# வல்லை பிரசைகள் குழுவினர் விடுத்துள்ள விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
28-3 89இல் வல்லை சிவன் கோவிலில் அமைதிப் படையினர் தேடுதல் என்ற தலைப்பில் வெளியான செய்தி, அதனைத் தொடர்ந்து 11-4-89இல் பிரசுரமான இந்திய அமைதிப் படையினரின் விளக்கம் சம்பந்தமாக வல்லைப் பிரசைகள் குழுவினர் இம்மாதம் 12ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு :-

மேற்படி செய்தி மற்றும் விளக்கம் ஆகியவற்றில் எமது பிரஜைகள் குழுவின் பெயரும் சம்பந்தப்பட்டிருப்பதால் இது சம்பந்தமாக விளக்கம் ஒன்றை அளிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

பொலிகண்டி அமைதிப் படை முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பத்மநாபன் தலைமையிலான இராணுவக் குழுவினர் சிவன்கோவிலின் இரண்டாம் பிரகாரத்தில் சோதனை மேற்கொண்டனர்.

சோதனையிடுவதற்கு முன்னர், இதுசம்பந்தமாக ஆலய தர்மகர்த்தாவின் அனுமதி பெறப்படவோ, அல்லது அவர் முன்னிலையில் சோதனையிடப்படவோ இல்லை.

வழமையாக நடைபெறும் உதயப்பூசைக்குப் பக்தர்கள் சிலர் வந்து கொண்டிருந்த நேரத்தில், அவர்கள் கோயில் வாசலில் தடுத்துவைக்கப்பட்டனர்.

அவ்வேளை கோயில் பூசை வேலைகளுக்காக ஆலய தர்மகர்த்தா திரு. சபாரத்தினம் இராமசாமி கோயிலை நோக்கி வந்த நேரத்தில் ஒரு இராணுவ உத்தியோகத்தரால் அவர் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து வல்வைப் பிரசைகள்குழு உறுப்பினரும், வல்லை முத்துமாரியம்மன்கோவில் தர்மகர்த்தாச்சபைத் தலைவருமான திரு. வ. இ. நடனசிகாமணி அவர்களை அழைத்து ஜீப் வண்டியில் இருந்து இரண்டு உரப்பை கேபிள் வயர்களைத் தூக்கிக்காட்டி, இது கோயிலுக்குள் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறியபொழுது அவரும் அங்கிருந்த சிலபக்தர்களும், தமது ஆச்சரியத்தைத் தெரியப்படுத்தினர்.

அங்கிருந்த பக்தர்களில் ஒருவர்கூட மேற்படி வயர்ப்பைகள் கோயிலில் இருந்து கொண்டுவந்ததைக் காணவில்லையென்றும், ஜீப்வண்டியினுள் இருந்ததையே தாம் கண்டதாகவும் குறிப்பிட்டன.

### காட்டப்படவில்லை

இவற்றைவிட அந்த நேரத்தில், அவுட்போட் வெளியிணைப்பு இயந்திரங்களோ அல்லது உதிரிப்பாகங்களோ அங்கிருந்த இராணுவ அதிகாரிகளினால் காட்டப்படவோ அல்லது பிரஸ்தாபிக்கப்படவோ இல்லை.

இந்த நிலையில் 11. 4. 1989 இல் உதயனில் வெளியான செய்தி எமக்கு வியப்பைத் தருகின்றது.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரோ அல்லது வேறு ஆயுதம் ஏந்திய போராளிகளோ இந்தப் பிரதேசத்திலுள்ள ஆலயங்களினுள் நுழைந்ததில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இது சம்பந்தமாக ஏற்கனவே உடுப்பிட்டிப் பிரதேச இராணுவ அதிகாரி கேணல் சர்மாவுடன் [illegible] யுள்ளோம். [illegible]

களாக வயர் கோயில் வீதியில் இருந்திருந்தால், தினமும் கோயிலுக்கு வரும் நூற்றுக் கணக்கான பக்தர்கள் இதனை அவதானித்திருப்பார்கள்.

அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முயற்சிக்கும் எங்களுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது.

### விசாரணைக்குழு அமைக்கவும்

தென்னிந்திய ஆலயங்களைப் போன்று வேதாகம முறைப்படி ஆறுகாலமும் பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வல்லை சிவன் கோயிலுக்கு களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய இச்செய்தி பிரசுரமானதையிட்டு இந்துக்கள் என்ற வகையில் நாம் மிக வேதனையடைகின்றோம்.

இந்தச் சூழ்நிலையில் இச் சம்பவத்தின் உண்மை நிலையை ஆராய்வதற்கு ஒரு விசாரணைக் குழுவை அமைக்க இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகள் முன்வருவார்களானால், இதில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு பிரஜைகள் குழுவும், இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பொது மக்களும் ஆயத்தமாக உள்ளனர் என்பதை அறியத் தருகின்றோம் - எனத் தெரிவிக்கப்படடுள்ளது. (உ)

## மினி முகாம் மூடப்பட்டது

கணுக்கேணி இந்திய இராணுவ மினி முகாம் மூடப்பட்டுள்ளது.

நாளடைவில் இப்பகுதிகளிலுள்ள மேலும் பல மினி முகாம்கள் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-94)

## ஈ என்.டி.எல்.எவ்.--.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சலியைச் செலுத்துகின்றோம்.

இத்தகைய நடவடிக்கைகள் எமது இனத்தையே அழிக்கும் நடவடிக்கை ஆகும். சம்பந்தப்பட்டவர்கள் எமது இனம் அழிவதைச் சிறிதேனும் அக்கறை செலுத்திச் சிந்திக்க வேண்டுகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தொலைபேசி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பரிவர்த்தனை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இதனால் பரிவர்த்தனை இயந்திரங்களின் உச்சக்கட்டப் பயனைப் பெறமுடியாது உள்ளது. இவ்வாறு காரணம் காட்டி இடமாற்றத்தின் அவசியம் குறித்து மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதாம். [illegible]

## இந்திய-----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டப்பட்டால் தமிழ்ப் பகுதிகளில், நிலைமை 1987 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்தது போல் ஆகிவிடும்.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நேரடிப் பேச்சுக்களை நடத்த விருப்பதை நாம் வரவேற்கிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்குத் திரும்பினால் அது எல்லோருக்கும் நன்மையாகும்.

ஆனால் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே ஏற்படும் உடன்பாடு எதுவும் இந்திய, இலங்கை உடன்பாட்டினால் ஏற்பட்டுள்ள நன்மைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கக் கூடாது.

-இப்படி திரு. பத்மநாபா கூறினார் என்று யு. என். ஐ. தெரிவித்தது. (அ-எ)

## கன்னட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி[
னுக்கு மணிநேரமும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

12ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த முனிவர் பஸ்வேஸ்வரா பற்றி நிந்தனை செய்து இப் புத்தகம் எழுதப்பட்டுள்ளதாம்.

இஸ்லாம் சமயத்தை நிந்தித்து எழுதிய சல்மான் ருஷ்டி என்ற எழுத்தாளருக்கு ஈரானிய அதிபர் ஆயத்துல்லா கொமேனி மரண தண்டனை விதித்தும் அந்த விவகாரம் உலகளாவிய ரீதியில்சர்ச்சைக்கு உரியதானதும் தெரிந்தவையே. [ஒ-எ]

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்-1989

கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகை சார்பில் 01-05-1989ஆந் திகதி தொடக்கம் 31-12 1989ஆந் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு கேள்விகள் 27-04-1989ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 26-04-1989ஆந் திகதி நண்பகல் 12-00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் 'செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.

இதுசம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
| --- | --- | --- | --- |
| 1 மாட்டிறைச்சிக் கடை | ரூபா 66,720/- | ரூபா 500/- | ரூபா 50/- |

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 18-4-1989.

[C 2229]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சத்தியலீலா ஸ்ரீரங்கன்

சூழானை சுன்னாகத்தைச் சேர்ந்த சத்தியலீலா ஸ்ரீரங்கன் 18 - 04 - 89 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற இரத்தினம், இராசம்மா தம்பதிகளின் அருமை மகளும், திரு. த. ஸ்ரீரங்கனின் [தொலைபேசி இயங்குனர், சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை] அன்பு மனைவியும், ஸ்ரீரமணன், ஸ்ரீசங்கர், ஸ்ரீரஜீவன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ஸ்ரீரஞ்சன் (டுபாய்), ஸ்ரீராஜினி, ஸ்ரீரவிந்திரன் (டுபாய்), ஸ்ரீராகுலன் (டுபாய்). ஸ்ரீராகவன் (டுபாய்) ஆகியோரின் மைத்துனியும், தில்லைநாதன் [குவைத்], கேதீஸ்வரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னரது இறுதிக்கிரியைகள் 19 - 04 - 89 இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. ஸ்ரீரங்கன்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சூழானை, சுன்னாகம்.

[10618]

## மார்க்கண்டு சின்னத்தங்கச்சி

உடுவில் தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு சின்னத்தங்கச்சி காலமானார்.

அன்னார் காலம்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலம்சென்ற சின்னத்துரை, காலம்சென்ற கதிர்காமு, சிராளசிங்கம் (J.P.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மருதலிங்கம், தேம்பாமலர், பத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, லோகேஸ்வரி, நடராசா, சாரதா ஆகியோரின் அன்பு மாமியாரும், குகவதனு, சிவகுமார் (லண்டன்), லிங்கேஸ்வரி (சுவிஸ்), தாரணி, தர்மினி, செந்திலன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19-04-1989) புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. மருதலிங்கம்.

உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

[10621]

## திரு. சின்னப்பு சங்கரப்பிள்ளை
(இருபாலைச் சந்தி)

கோப்பாய் தெற்கு இருபாலை வாசியும் முன்னாள் கலைவாணி அச்சக முகாமையாளருமான திரு. சின்னப்பு சங்கரப்பிள்ளை அவர்கள் 18- 04- 1989 இல் காலமானார். அன்னார் ஆச்சிப்பிள்ளையின் பிரிய கணவரும், கெங்காதரன், கெங்காதேவி, கெங்கேஸ்வரி, தர்மலிங்கம் (ஜேர்மனி) அவர்களது அருமைத்தந்தையும் சிவபாக்கியம், உலகநாதன், பாலசுப்பிரமணியம் [ஆசிரியர்], ராஜலக்சுமி, ஆகியோரின் அன்பு மாமனாரும் காசிப்பிள்ளை [உரும்பராய்), சண்முகம் ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமைக்கிரியைகள் 19-04-89 புதன் கிழமை மு.ப 11.00 மணிக்கு இருபாலைச்சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
அ. உலகநாதன்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

[10619]

## டாக்டர் நடராசா விஜயேந்திரன் (ஜே. பி.)

நடராசா விஜயேந்திரன், ஜே. பி. (வைத்திய கலாநிதி, அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை-கைதடி) 18-04-1989ந் திகதியன்று அகால மரணமடைந்துவிட்டார். இவர் முன்னாள் யாழ் மாநகரசபை துணை முதல்வரும், வைத்தியருமான காலஞ்சென்ற அரசபிள்ளை நடராசா - ஜே. பி. காலஞ்சென்ற திருமதி இலட்சுமி அம்மா நடராசா (விவாகப் பதிவாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மூத்த புதல்வரும், விமலாவின் அன்புக் கணவரும், ஜனகன். ஜயந்தன், ஜெனனி ஆகியோர்களின் அன்புத் தந்தையும், திரு. சி. கனகரத்தினம் - ஜே. பி. யூ. எம், சட்டத்தரணி (தலைவர்-வடபிராந்திய போக்குவரத்துச் சபை)திருமதி சரஸ்வதி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும். திரு. நடராசா கணேந்திரன் (இங்கிலாந்து), திருமதி சந்திரா சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் க. ஜெகதீசன் (அமெரிக்கா), க. கேசவன் (சட்டத்தரணி), டாக்டர் க. சிவநேசன் (அமெரிக்கா), திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம், ந. சண்முகலிங்கம் (கிராம சேவையாளர் - நல்லூர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. க. சிவபாதசுந்தரம் (கணக்காளர்) அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

''சிவஸ்தான்''
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: சி. கனகரத்தினம்

(10622)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 19 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.